சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 4	இதழ்: 04	செப்டம்பர்- 2022	விலை - ரூ.15/-
VOL:4	ISSUE: 04	SEPTEMBER - 2022	Rs. 15/-



காஞ்சி மகான் மகா பெரியவா..!

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ. **550** மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

ரூ.501/மதிப்புள்ள அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-4 மலர்-4 செப்டம்பர் - 2022

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
செல்வி. டாக்டர்.S.சௌம்யா, ஊட்டி.

இதழ் வடிவமைப்பு
சிகரம் பப்ளிகேஷன்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி. அயனாவரம், சென்னை 600 023.
செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



என் அன்பு குழந்தாய்!

வசதியும் சௌகரியமும் இருந்தால், உங்களுக்கு தேவையானவற்றை எல்லாம் நீங்கள் உருவாக்கி விடலாம். ஆனால் மனதை ஒருநிலைப் படுத்தினால் மட்டுமே ஒருவரால் நல்வாழ்வை உருவாக்க முடியும்.

மனதில் சலனம் இருக்கும் வரை உன்னால் நிம்மதியாக வாழ முடியாது.

நீ பார்க்கும் எல்லாம் பிரச்சினையாக தான் தெரியும். அதுவே, மனதை ஒருநிலைப் படுத்தினால் மட்டுமே உன்னால் எதையும் சாதிக்க முடியும்.

நல்ல நோக்கம் மட்டும் போதாது, சரியான செயலை சரியான விழிப்புணர்வுடன் செய்தால்தான் நீ விரும்பும் பலன் கிடைக்கும்.

நீ சகல சௌபாக்கியங்களையும் பெற்று சீரும் சிறப்புமாய் நல்ல பெயருடன் நிம்மதியான மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ வேண்டுமானால், என் வார்த்தைகள் மீது நம்பிக்கை வைத்து செயல்படு, மீதியை நான் பார்த்துக்கொள்கிறேன்.

உன் தாயாக, தந்தையாக என்றும் நான் உனக்கு துணையாக இருப்பேன்.

நல்லதே நடக்கும். என் பரிபூரண அருளும், ஆசிர்வாதமும், அன்பும் எப்போதும் உனக்குண்டு.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

சற்குரு சாயிநாதரின் அருளால் ஐம்பதாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 07.08. 2021 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞான சபையில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை - 23) வெகு விமரிசையாக நடைபெற்றது.

விழா காலை 9 மணிக்கு ஆசிரியரின் தியான நிகழ்வும், அதைத் தொடர்ந்து "சாயி காணக்குயில்" திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார் அவர்களின் பஜனை நிகழ்ச்சி நடந்தது. காலை பத்து மணிக்கு, திரு. உதி மூர்த்தி அவர்கள் விழாவினை தொகுத்து வழங்க "பாராயண பகலவன்" திரு. சுந்தர் சாய் அவர்களின் தலைமையில், நமது இதழின் ஐந்தாம் ஆண்டு துவக்க விழா இனிதே துவங்கியது.

இம்மாத இதழை, ஸ்ரீ குரு தத்த பாதுகா சேத்திரம் ஆலய நிர்வாகி, திருமதி. மஞ்சரி ரமேஷ் பாபு அவர்கள் வெளியிட, சம்பூர்ண ஸ்ரீ ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப சரிதாம்ருத புத்தகத்தின் ஆசிரியர், திருமதி. மாதங்கி பாலாஜி அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித் தார்கள். அதைத்தொடர்ந்து சாயி சேவையில் சிறந்து விளங்கும் 21 நபர்களுக்கு, அவர்களின் சேவையை பாராட்டும் விதமாக, விருதுகள் வழங்கி கௌரவிக் கப்பட்டது..

விழாவில், திரு.சுந்தர்சாய், திருமதி. மஞ்சரி, திருமதி. மாதங்கி, திருமதி சரண்யா, திரு. அகஸ்டின், திரு. உமா சங்கர், திரு அண்ணாமலை. திரு. இராமமூர்த்தி, ஆகியோர் தங்களது



அனுபவங்களை பக்தர்களிடம் பகிர்ந்து கொண்டார்கள்.

விழாவின் இறுதி நிகழ்வாக, குருவருள் வேண்டி திரு அசோக்குமார் அவர்களின் முன்னிலையில், திரு. ஆரணி ரவி அவர்கள், சாயிநாத ஸ்தவன மஞ்சரி முழுவதையும் பார்க்காமல் ஒப்புவித்தார்கள். அவர்களுக்கு, திரு.இராமமூர்த்தி அவர்கள் காணிக்கை கொடுத்து கவுரவித்தார்கள். அத்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

இம்மாதம் நமது இதழுக்கு, குடந்தை திரு.ராகவேந்திரன் அவர்கள், 7 ஒரு வருட சந்தாவும், திருச்சி மாதவன் அவர்கள் 2, மூன்று வருட சந்தாவும், இணைத்து சாயி சேவை செய்துள்ளனர்.அவர்களும், அவர்களது குடும்பத்தினர் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று பகவான் சாயிநாதரின் ஆசியோடு வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறோம்.

வந்திருந்த அனைத்து சாயி பக்தர்களுக்கும், " சாய் தியானாலயா பிரார்த்தனை மையம்" சார்பில் அன்னபிரசாதம் வழங்கப்பட்டது. மேலும், இதழ் வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

பகவான் சாயிநாதரின் அருளால் மிக விரைவில் உலகெங்கும் பரவியிருக்கும் பெருந் தொற்று கட்டுக்குள் வந்து உலக மாந்தர்கள் அனைவரும் நிம்மதியுடனும், ஆரோக்கியத்துடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.







மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்.

சீரடி புனித யாத்திரை



– ஜெயந்தி ஸ்ரீராம்

இரயில் நிலையம் வந்துவிட்ட குரு அவர்கள், யாத்ரீகர்கள் அனைவரும் வந்துவிட்டார்களா என்று சரிபார்க்க, சென்னை திருமுல்லைவாயிலில் இருந்து இரு பெண்கள் இன்னும் வரவில்லை என்பதை அறிந்து அவர்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறார்.

அவர்களோ, நாங்கள் 15 ந்தேதி என்றல்லவா நினைத்திருந்தோம் என்று கூற ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது என்பதை புரிந்து கொண்ட குரு அவர்கள், ரயில் புறப்பட இன்னும் 1. 30 மணி நேரம்தான் இருக்கின்றது. அதற்குள் புறப்பட்டு வாருங்கள். என்று கூற, அவர்கள் நாங்கள் எப்படியாவது வந்து விடுகிறோம். எங்களை விட்டுவிட்டுச் சென்று விடாதீர்கள். என்று கேட்டுக்கொள்ள,

பாபா அனுமதித்தால் நீங்கள் எங்களுடன் வருவீர்கள். வண்டி புறப்படும் வரை உங்களுக்காக காத்திருக்கின்றோம் என்று கூறிவிட்டு குரு காத்திருந்தார்கள். சரியாக இரயில் புறப்பட்டும்முன் இரண்டு நிமிடத்திற்கு முன்பாக அவ்விரு பெண்களும் வந்து சேர, பாபாவின் கருணையோடு, அவர் அனுமதித்த 36 நபர்களோடு, எங்களது புனிதப் பயணம் துவங்கியது.

மறுநாள் காலை10 மணிக்கு சீரடி சாய்நகர் சென்றோம். அங்கிருந்து

சாய் தியானாலயா பிரார்த்தனை மையத்தின் சார்பில் 7 வது சீரடி புனித யாத்திரை கடந்த 13.7.2022 அன்று சென்னையில் இருந்து 36 யாத்திரிகர்களுடன், நமது ஆசிரியரும், நமது குருவுமான ஸ்ரீராம் அவர்களது தலைமையில் புறப்பட்டது.

13 ந் தேதி காலை 10.20 க்கு சாய்நகர் விரைவு வண்டியில் முன் பதிவு செய்யப்பட்டிருந்ததால், தேனி, ஆண்டிப்பட்டி, பாண்டிச்சேரி, திருச்சி, மற்றும் சென்னை சுற்றுப்புறத்தில் இருந்தும் யாத்திரீகர்கள் காலை 8 மணிக்கெல்லாம் சென்னை சென்ட்ரல் இரயில்வண்டி நிலையத்திற்கு வந்து சேர்ந்தனர்.

காலை 6 மணிக்கெல்லாம்

தயாராய் இருந்த ஆட்டோவில் ஏறி நாங்கள் தங்கப்போகும் ஓட்டலை பத்து நிமிடத்தில் அடைந்தோம். அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அறைகளுக்கும் சென்று குளித்து முடித்து தயாராகவும், தமிழகத்து மதிய உணவு சுடச்சுட தயாராக இருந்தது. அனைவரும் ஆனந்தமாக உணவை உண்டு முடித்து உடனடியாக பாபாவின் தரிசனத்திற்கு புறப்பட்டோம்.

அன்று குருபூர்ணிமா, வியாழக்கிழமை வேறு, லேசான தூறல் எங்களை இதமாக வரவேற்றது. பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கப் போகின்றது என்று பயந்தபடியே சென்ற எங்களுக்கு பாபா இன்ப அதிர்ச்சியைத் கொடுத்தார். ஆலயத்தில் கூட்டம் இல்லாதது எங்களுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

அங்கிருக்கும் காவலர்களிடம் இலவச தரிசனத்திற்கு டோக்கன் எங்கு வாங்குவது என்று விசாரித்தோம். கூட்டம் இல்லாததினால் டோக்கன் தேவையில்லை. நேரடியாக தரிசனத்திற்கு செல்லுங்கள் என்று அனுப்பி வைக்க, அடுத்த 10 நிமிடங்களில் நாங்கள் பகவான் சாயி பாபாவின் தரிசனத்தை பெற்றோம்.

கூட்டம் அதிகம் இல்லாததினால் எங்களுடன் வந்த பக்தர்கள் பொறுமையாக கண்







குளிர பாபாவை தரிசித்தனர். பிறகு குருஸ்தான், லெண்டிபார்க், அருங் காட்சியகம், பாராயண ஹால், ஆலய வளாகத்தில் அமைந்திருக்கும் நானாவதி சமாதி, தாத்யா சமாதி, ஜயர் சமாதி, அப்துல்லா சமாதி ஆகிய



வற்றையும் தரிசித்துவிட்டு, சிவன், கணபதி, சனி பகவான் ஆகியோரையும் தரிசித்து வெளியில் வந்து ஆஞ்சநேயர், துவாராகாமாயி, அப்துல்லா குடில், சாவடி ஆகியவற்றையும் தரிசித்து இரவு 8 மணிக்கு அறைக்குத் திரும்பினோம்.

இரவு உணவு தயாராய் இருந்தது. உண்டுகளித்து அனைவரும் ஓய்வெடுத்து கொண்டோம். மறுநாள் காலையில் 4 மணிக்கு ஆலய வளாகத்தில் தியானம் நடைபெறும் முடிந்தவர்கள் வரலாம் என்று குரு அவர்கள் தெரிவித்திருந்தார்கள். நாங்கள் 20 நபர்கள் தியானத்தில் கலந்து கொண்டோம்.

சிவன், கணபதி, சனி பகவான் சன்னதிக்கு பின்புறம் மாடியில் தியான ஹால் அமைந்திருக்கின்றது. தியானம் செய்யும் பக்தர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். தியானம் முடித்து மீண்டும் அறைக்கு வந்து 8 மணிக்கு காலை உணவு முடித்து அனைவரும் சிவநேசன் சமாதிக்குச் சென்றோம்.

மழை தூறிக் கொண்டே இருந்தது. ஆனாலும் நாங்கள் அனைவரும் ஆனந்தமாக இரண்டு கிலோ மீட்டர் தூரமுள்ள சிவநேசன் சமாதிக்கு நடந்தே சென்றோம். அங்கு நமது குரு ஸ்ரீராம் அவர்கள் சத்சங்கம் நிகழ்த்தினார்கள். அதன்பின்பு தியானம் நடைபெற்றது.

தியானத்தின் ஆரம்பத்திலேயே குரு அவர்கள் நீங்கள் கண்களை மூடிய அடுத்த நொடியே இங்கு ஒரு பைரவர் வந்து உங்கள் அனைவருடைய தலையிலும் தன் கால்களால் தடவிக்கொடுப்பார். யாரும் பயந்து கண்களை விழித்துப் பார்க்கக்கூடாது என்று கூறிவிட்டு தியானத்தை ஆரம்பித்தார்.

அவர் கூறியதைப் போலவே அனைவரும் கண்களை மூடிய உடன் இரண்டு பைரவர்கள் வந்து அனைவர் தலையிலும் தடவிக்கொடுத்தார்கள். இது ஒவ்வொரு யாத்திரையின் போதும் தவறாது நடக்கும் நிகழ்வுதான் என்றாலும் இம்முறை இரண்டு

பைரவர்கள் வந்தது ஆச்சரியமாக இருந்தது. தியானம் முடித்து அறைக்கு வரும்வரை பைரவர்கள் எங்கள் கூடவே வந்தார்கள்.

தியானம் முடிந்ததும், சிவநேசன் சுவாமிகளுக்கு பூஜை செய்யும் சுவாமிகள், நமது குருவிடம் பூஜை பொருட்களை கொடுத்து சிவநேசன் சுவாமிகளுக்கு பூஜை செய்யும்படி கூற குருவும் அவர் கூறியதை போன்று அனைத்து பூஜைகளையும் செய்தார்.

சுவாமிகள் அனைவருக்கும் கேசரி பிரசாதம் வழங்கி, உதி அளித்தார். நமது குருவிடம் ஒரு கிலோ அளவிற்கு உதியை சேகரித்து ஒரு பாக்கெட்டில் போட்டு அன்போடு அவரை அனைத்து ஆசிர்வதித்து அனுப்பி வைத்தார்.

மதியம் உணவு முடித்து சற்று ஓய்வெடுத்துக்கொண்டு 3 மணிக்கு புறப்பட்டு லெட்சுமிபாய் வீடு, மகல்சாபதி வீடு, பய்யாஜி வீடு, கந்தோபா ஆலயம் பார்த்து விட்டு, தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு அறைக்குத் திரும்பி உணவருந்திவிட்டு, ஓய்வெடுத்துக் கொண்டோம்.

மறுநாள் காலை சிற்றுண்டி அருந்திவிட்டு, பேரூந்தில் புறப்பட்டு, சனிசிங்னாப்பூர், கிறிஸ்னேஸ்வரர் சோதிலிங்கம், ஆஞ்சனேயர் கோவில், எல்லோரா குகைக்கோவில் பார்த்துவிட்டு இரவு அறைக்குத் திரும்பினோம்.

மறுநாள் காலை 4 மணிக்கு அனைவரும் மீண்டும் சாயி நாதரை தரிசனம் செய்துவிட்டு, காலை 10 மணிக்கு புறப்பட்டு, உபாசினி மகராஜ், ரஞ்சன்காவ் கணபதி கோவில் பார்த்துவிட்டு இரவு 9 மணிக்கு புனே வந்தடைந்தோம். அங்கிருந்து 10.10 க்கு சென்னை எக்ஸ்பிரஸில் புறப்பட்டு, மறுநாள் மாலை 4 மணிக்கு சென்னை வந்தடைந்தோம்.

பகவான் சாயிநாதரின் பேரருளா



லும், பக்தர்களின் ஒத்துழைப் பாலும், எங்களது 7 வது சீரடி புனித யாத்திரை மிகச் சிறப்பாகவும், ஆனந்தமாகவும் நிறைவடைந்தது. யாத்திரீகர்கள் அனைவரும் பிரியாவிடை பெற்றுக் கொண்டு அவரவர் இல்லம் வந்து சேர்ந்தோம்.

8 வது யாத்திரை வருகின்ற 21.09.22 அன்று புறப்படுகின்றது. 9 வது யாத்திரை வருகின்ற 18.01.23 சனவரி அன்று புறப்படுகின்றது. சனவரி யாத்திரைக்கு வருகின்ற 01.9.22 முதல் முன்பதிவு



தொடங்குகிறது. விபரங்களுக்கு கீழ்கண்ட எண்ணில் தொடர்பு கொள்ளவும்: 99418 16692.

5 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும்

"சாயி மகராஜ் குருவை தேடி" ஆன்மீக மாத இதழுக்கு எங்களது இதயங்கனிந்த இனிய, எளிய வாழ்த்துக்கள். மேன்மேலும் பல ஆண்டு தாண்டி சாயி சேவையில் பாபாவின் அருளோடும், ஆசியோடும் பல சாதனைகளை புரிய வாழ்த்துகிறோம்.



SGN Pharmaceuticals

Dealers in Vaccines,
Hormones & Life saving drugs.
Old no. 1, new no. 3/2, Ground floor,
Rama Mandira street, Villivakkam, chennai-49.

G.senguttuvan,
Cell: 9841812776, 9600361759

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

– ஜெயந்தி ஸ்ரீராம்

லீலை: 11. சமைக்க கற்றுத் தந்த சாயி

சாயிநாதா, கலியுகத்தின் கண்கண்ட தெய்வமே! உன்னையல்லால் இந்த லீலைகளின் தலைவன் வேறு யாராக இருக்க முடியும். இதுபோன்ற லீலை களை நாங்கள் புராண கதைகளில் மட்டுமே படித்தும், கேட்டும் இருக் கின்றோம்.

கலிமுற்றிய இக்காலத்தில் இது போன்ற அதிசயங்கள் நடக்குமா என்று சஞ்சலம் கொள்ளும் சந்தேகப் பிராணியாகிய எங்களை உய்விக்க வந்த உலக நாயகனே! இக் கீழான பிறவிகள் நம்ப வேண்டும் என்பதற்காக உன் உயர்வான பரம்பொருள் நிலையினை தாழ்த்தி எங்களுக்காக லீலை புரியும் லீலா விநோதா! உன் பாதம் பற்றுதலை தவிர வேறென்ன வேலை எமக்கு.

இறைவனே இப்பூவுலகினில் சங்கம் வைத்து சேவை செய்தாலும், சங்கடங்கள் இல்லாது சங்கம் நடத்த இயலாது போலும். எங்களது சபை எம்மாத்திரம். ஆம் எங்களது சபையிலும் சீராக நடந்து கொண்டிருந்த அன்ன சேவை. சில "நான்" என்ற அகங்காரம் கொண்ட சகோதரிகளால் அன்னம் தயாரிப்பில் தொய்வு ஏற்பட்டது.


குருவிற்கு எப்போதுமே காலம் மிகவும் முக்கியம். காலம் தவறி னால் அவர் முகத்தில் கோபத்தின்



ரேகையினை பார்க்கலாம். அன்ன தானத்தை மதியம் 12 மணிக்குள்ளாக கொடுத்து விடவேண்டும் என்பதில் மிகவும் கறாராக இருப்பார்கள்.

தனக்கு சமைக்கத் தெரியாது என்பதால், சபைக்கு வரும் ஒரு சில சகோதரிகளை நம்பி சமைக்கும் பணியை ஒப்படைத்திருந்தார்கள். இருந்தாலும் சகோதரிகள் வருவதற்குள் காய்கறிகளை நறுக்கி, பாத்திரங்களை கழுவி, சமையலுக்கு முன் உள்ள ஆயத்தப்பணிகளை முடித்து தயாராக வைத்திருப்பார்கள். சகோதரிகள் வந்து அடுப்பை பற்ற வைத்து சமைப்பது மட்டும்தான் வேலை.

கொஞ்சம் காலம் சரியாக நடந்து



கொண்டிருந்த சமையல் பணி சகோதரிகளின் அகந்தையால் நீயா, நானா என்ற போட்டி நடக்கத் தொடங்கி, சமையல் கால தாமதமாகமாகத் தொடங்கியது. குரு எவ்வளவோ சமாளித்துப் பார்த்தார். "அவர் செய்வார் என்று இவரும், இவர் செய்வார் என்று அவரும்" நேரம் தாழ்த்தி வர ஆரம்பித்தார்கள்.

குரு எப்போதும் உடனடியாக கோபப்படவோ, அல்லது தீர்வை தேடவோ மாட்டார்கள். எவ்வளவு தூரம் போகிறதோ, அவ்வளவு தூரம் போகட்டும் என்று விட்டுப் பிடிப்பார்கள். ஏன் என்றால் இது பாபாவின் காரியம். அவர் இதற்கு வேறு ஏதாவது தீர்வு வைத்திருப்பார். அது வரை நாம் பொறுமையாக இருக்க வேண்டும் என்று கூறுவார். அதன்படியே அவரும் பொறுமையாக இருந்தார்.

குரு கூறியபடி பாபாவின் தீர்ப்பு நாளும் வந்தது. அது ஒரு வியாழக்கிழமை சமைப்பதற்கு தேவையான அனைத்தையும் தயாராக வைத்துக்கொண்டு குரு அவர்கள், சமைக்கும் சகோதரிகளுக்காக காத்திருக்கின்றார். மணி காலை 9 ஆகிவிட்டது. யாரையும் காணோம்.

பொறுமையாகக் காத்திருந்தார். மணி 10 ஆகியும் ஒருவரும் வரவில்லை.

காய்கறி எல்லாம் வெட்டி தயாராக இருக்கின்றது. மணி 10.10 கீழிருந்து யாரோ குருவை பெயர் சொல்லி அழைப்பது போல் எனக்குக் கேட்கின்றது. நான் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. மீண்டும் மீண்டும் கேட்கவே, நான் குருவிடம் உங்கள் பெயரைச்சொல்லி யாரோ கூப்பிடுகிறார்கள். யார் என்று பாருங்கள் என்று கூற, உடனே குருவும் கீழே எட்டிப்பார்க்கின்றார்கள்.

அங்கே, குருவினுடைய பழைய பார்ட்டனரும், டாடா கம்பெனியின் சமையல் கான்ட்ராக்டருமான திரு. நமசிவாயம் என்பவர் நின்றிருக்கின்றார். நமது குருவின் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டவர். அவர் வடபழனி இரட்டை சித்தர்களின் ஒருவரான ஸ்ரீ வெங்கடராம சுவாமிகளின் சீடரும் ஆவார்.

குரு அவர்கள் அவரைப் பார்த்ததும் வாருங்கள் சாய்ராம் என்று ஓடிப் போய் அழைத்து வந்தவர், ஆச்சர்யம் விலகாமல், உங்களுக்கு எப்படி வீடு தெரிந்தது. யார் கூறினார்கள் என்று கேள்வி மேல் கேள்வி கேட்க, அவரோ பையில் இருந்து நமது சாயி மகராஜ்

குருவை தேடி புத்தகத்தை எடுத்து கொடுக்க குருவும் புரிந்து கொண்டார்.

திரு.நமசிவாயம் அவர்களும், நமது குரு அவர்களும் ஒரு காலத்தில் ஒன்றாக வியாபாரம் செய்தவர்கள். பத்து ஆண்டுகளுக்குப் பின் இப்போது நேரில் சந்திக்கின்றனர். நமசிவாயம் அவர்கள் செங்கல்பட்டுக்கு அருகே மேலையூர் என்ற கிராமத்தில் சமாதி கொண்டுள்ள, ஸ்ரீ வெங்கட்ராம சுவாமிகளின் சீவ சமாதியில் சேவை செய்து கொண்டு அங்கேயே வசிக்கின்றார்.

நமசிவாயம் பெரிய செல்வந்தர். ஆன்மீக ஈடுபாட்டின் காரணமாக எளிமையாக வாழ்க்கை வாழ்கின்றார். 75 வயதாகிவிட்டாலும் சுறுசுறுப்பாக இருப்பார். நம்முடைய புத்தகத்தை செங்கல்பட்டில் பார்த்திருக்கின்றார். அதன்மூலம் முகவரியை கண்டுபிடித்து வந்திருக்கின்றார். அதுவும் தனது டூ வீலர் வண்டியிலேயே பயணப்பட்டு வந்திருக்கின்றார்.

நேற்றிரவு ஆஸ்ரமத்தில் படுத்திருந்தேன். உங்கள் ஞாபகம் வந்தது. பார்த்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. பிறகு அப்படியே தூங்கி விட்டேன். காலையில் எழுந்து செங்கல்பட்டுக்கு பூசைக்கு பூ வாங்குவதற்காக வந்தேன். எதேச்சையாக அந்த கடையில் ஒரு பாபா புத்தகம் கிடந்தது.

அதை எடுத்து புரட்டினால் அதில் உங்கள் படம் அச்சாகியிருந்தது.பிறகு படித்துப் பார்த்ததில் அது உங்கள் புத்தகம் என்று தெரிந்து கொண்டு உடனடியாக முகவரியைக் குறித்துக் கொண்டு புறப்பட்டு வந்து விட்டேன். என்றார்.

இருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது, என் மனம், பாபா தன் பக்தர்களுக்காக எப்படி எல்லாம் லீலை நடத்துகிறார் என்று பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டே என் மனம் சிந்தித்தது. இங்கோ குரு அவர்கள் சமையலுக்கு ஆள் இன்றி தவித்துக் கொண்டிருக்கின்றார். வந்தவரோ மிகப்பெரிய சமையல் கான்ட்ராக்டர்,

குருவிற்கோ, இன்று இவர் நம்மைக் காண வருவார் என்பது தெரியாது.

முதல்நாள் இரவு தான் அவருக்கு நம் குருவின் நினைவு வந்திருக்கின்றது. உடனே மறுநாள் காலையில் குருவின் விலாசத்தை தெரிவிக்க புத்தகத்தை அவரின் கண்களில் காட்டி, அவரையே இங்கு வரச்செய்து லீலை புரிந்திருக்கின்றார் சாயி. இன்னும் என்ன நடக்கப் போகின்றது என்று ஆவலுடன் வேடிக்கைப் பார்க்கலானேன்.

அன்னதானத்திற்கு நறுக்கி வைத்திருந்த காய்கறிகளைப் பார்த்து ஏன் இவ்வளவு காய்கறிகள் வெட்டி வைத்திருக்கின்றீர்கள் என்று நமசிவாயம் அவர்கள் கேட்க, குரு அனைத்து விவரங்களையும் கூறி, 12 மணிக்குள் அன்னதானம் கொடுக்க வேண்டும். என்று கூற, அதற்கு நமசிவாயம் அவர்கள், பொதுவாக அடுத்தவர்களை நம்பி எதையும் செய்யக்கூடாது. அதிலும் இம்மாதிரி ஆன்மீக காரியங்களுக்கு நம்பவே கூடாது.

நம்மால் என்ன முடியுமோ அதையே செய்ய வேண்டும். இல்லை என்றால் நாமே கற்றுக் கொண்டு செய்து விட வேண்டும். என்றார். இப்போது மணி 10.30 இன்று மட்டும் 12.30 க்கு அன்னதானம் செய்யுங்கள். இனி அடுத்த வாரத்தில் இருந்து

நீங்களே சமையல் செய்யலாம் அதை இப்போது கற்றுத் தருகின்றேன். முதலில் அடுப்பை பற்ற வையுங்கள் என்றவாறே அவராக முன்வந்து வேலையை ஆரம்பித்தார்.

மிகச் சரியாக ஒரு மணிநேரத்தில் இருக்கின்ற பொருட்களை வைத்துக் கொண்டு 100 நபர்கள் சாப்பிடுவதற்கு சுவையான பிரிஞ்சி சாதம் செய்து கொடுத்தார். அதுமட்டுமின்றி குருவிற்கும் சில ஆலோசனைகளை வழங்கி சமைக்க கற்றுக் கொடுத்தார்.

உணவு தயாராகி பாபாவிற்கு படைக்கும் நேரத்தில் ஒவ்வொரு சகோதரியாய் வந்தார்கள். வந்தவர் களுக்கு ஆச்சர்யம். நாம் இல்லாமல் சமையல் ஆகிவிட்டதா, எப்படி என்று தங்களுக்குள் குசு குசு வென்று பேசிக்கொண்டு நின்றார்கள். குரு அவர்களை எதுவும் சொல்ல வில்லை.

தாமதமாக வந்த சகோதரிகளை வைத்துக் கொண்டே அடுத்த அரை மணிநேரத்தில் உணவை பொட்டலம் போட்டுக் கொண்டு குருவும் அன்னதானம் செய்யப் புறப்பட்டார். மணி சரியாக 12.30.

புறப்படும் போது நமசிவாயம் அவர்கள் குருவிடம், நான் இதுவரை சீரடி சென்றதில்லை. நீங்கள் சீரடி சொல்லும்போது என்னையும் கூட்டிச் செல்லுங்கள். நீங்கள் எப்போது சீரடிக்கு செல்கின்றீர்கள் என்று கேட்டார்.

குருவும் அடுத்த மாதம் செல் கின்றோம் உங்களுக்கும் டிக்கெட் போட்டு விடுகின்றேன். கண்டிப்பாக



சேர்ந்து போகலாம் டிக்கெட் போட்டுவிட்டு உங்களுக்கு தகவல் தெரிவிக்கின்றேன் என்றார். பிறகு அவருக்கு நன்றி கூறி விட்டு, அன்ன தானம் செய்ய புறப்பட்டுச் சென்றார்.

திரு.நமசிவாயம் அவர்களும் அனைவரிடமும் விடைபெற்றுச் சென்றார். அடுத்த வாரத்தில் இருந்து குரு, தான் ஒருவராகவே காலை 5 மணிக்கு ஆரம்பித்து காலை 7 மணிக்குள் 150 நபர்களுக்கு சமைத்துவிட்டார். அது இன்றளவும் தொடர்கின்றது. அன்னதானத்தை பொறுத்தவரை பாபாவைத் தவிர வேறு ஒருவரையும் குரு துணைக்கு அழைப்பதில்லை.

ஒருவரை ஆன்மீக சேவைக்கு எப்படி எல்லாம் பாபா தயார் படுத்துகின்றார் என்பதை பார்த்



தீர்களா? பத்து வருடமாக தொடர்பே இல்லாத இருவரை சந்திக்க வைத்து, அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டு, அன்றைக்கு நடைபெற வேண்டிய தன்னுடைய வேலையை எப்படி வாங்கிக் கொள்கின்றார் பாருங்கள். அதையும் தாண்டி தன்னை முழுமையாக நம்பும் ஒருவருக்கு "நான் இருக்கின்றேன்" என்பதை நிரூபிக்கின்றார் நம் சாயிதேவன்.

இந்நிகழ்வு நடந்து அடுத்த ஒரு மாதத்தில் நாங்கள் சீரடிக்கு புனிதப் பயணம் மேற்கொண்டோம். அதில் திரு.நமசிவாயத்திற்கும் டிக்கெட் புக் பண்ணியிருந்தோம். ஆதலால் குரு அவர்கள் நமசிவாயத்தை தொடர்பு கொண்டார். சரியான தகவல் கிடைக்காததினால், செங்கல்பட்டு செல்லும் நண்பர் ஒருவரிடம் விபரம் கூறி அவரது முகவரிக்கு நேரில் சென்று விபரம் தெரிவிக்குமாறு அனுப்பி வைத்தார்.

விபரம் அறிந்து வரச் சென்ற நண்பர் அங்கிருந்தே குருவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அய்யா நமசிவாயம் ஒரு மாதத்திற்கு முன்பே இறந்து விட்டாராம் என்ற தகவலைக் கூறியிருக்கின்றார். அதிர்ச்சியடைந்த குரு மேற்கொண்டு விசாரிக்க, நமச்சிவாயம் சபைக்கு வந்து சமைத்துக் கொடுத்துவிட்டுச் சென்ற மூன்றாம் நாள் அதிகாலை தூக்கத்திலேயே உயிர் பிரிந்துவிட்டார் என்ற விபரத்தை அறிந்து கொண்டார்.

அன்றிலிருந்து மூன்று நாட்கள் தனது நண்பர் நமசிவாயத்திற்காக குரு அவர்கள் மூன்று நாட்கள் மவுனவிரதம் இருந்து அஞ்சலி செலுத்திவிட்டு, சீரடி புறப்பட்டார்கள். பயணத்தின்போது நமசிவாயம் அவர்களுக்கு முன் பதிவு செய்த டிக்கெட்டை ரத்து செய்ய வேண்டாம் என்று கூறிவிட்டார். திரும்பி வரும் டிக்கெட்டை மட்டும் ரத்து செய்யுமாறு கூறினார்.

எங்களுக்கு குழப்பம் ஏற்பட்டு, ஏன் திரும்பி வரும் டிக்கெட்டை மட்டும் ரத்து செய்ய வேண்டும் என்று குருவிடம் கேட்ட போது, நமசிவாயம் நம்முடன் சீரடி வருகின்றார். ஆனால் திரும்ப நம்முடன் வரமாட்டார் என்று கூறினார்.

பின்னாளில் குரு அவர்கள் நமசிவாயம், தான் சரீரத்தை விட்ட 48 வது நாள் சீரடியில் பகவான் பாபாவின் பாத காலங்களில் சரண் புகுந்து விட்டார் என்று கூறினார். நாங்கள் சீரடி புனிதப் பயணம் செய்து பகவான் பாபாவை தரிசித்த அந்த நாளே திரு. நமசிவாயம் மறைந்த 48 வது நாள் என அறிந்து நானும் ஆச்சரியப்பட்டேன்.

– லீலைகள் தொடரும்...



"சாயி மகராஜ் குருவை தேடி" ஆன்மீக மாத இதழின் 5 ஆம் ஆண்டு துவக்க விழாவிற்கு எங்களது இதயங்கனிந்த இனிய, எளிய வாழ்த்துக்கள். மேன்மேலும் பல ஆண்டுகள் சாயி சேவையில் சாதனைகளை புரிய வாழ்த்துகிறோம்.

அன்புடன்,

S. புருசோத்தமன் குடும்பத்தார்,
பாடி, சென்னை- 600050

கடவுளையே கேளுங்கள்!

கடவுளிடம் கேட்பதற்கு ஒன்றும் இல்லை அவரிடம் நீங்கள் கேட்க நினைக்கும் அனைத்தும் அறியாமை. அதனால் நீ கேட்கும் அனைத்தும் கர்மாவாக உன்னை வந்து துன்பமாக சேருகிறது.

உங்களுக்கு எந்த காலகட்டத்தில் எதை வழங்க வேண்டும் என்பது இறைவனே அறிந்தவர். நீங்கள் கேட்க நினைக்கும் அனைத்தும் தேவையற்றத் துன்பத்தை விலை கொடுத்து வாங்குவதாகும்.

பலரின் துன்பத்திற்கும் கர்மாவிற்கும் காரணம் அவர்கள் தகுதிக்கு மீறி ஆசை கொண்டு தன்முனைப்பு கொண்டு தன்னுடைய தேவை அறியாது கடவுளிடம் பெற்று மன வேதனையும் கஷ்டங்களையும் தேடிக் கொள்கிறார்கள்.

உன் தேவைகளை கடவுளிடம் ஒப்படைத்து விடு. அவருக்கு அனைத்தும் தெரியும். எப்போது எதை வழங்க வேண்டும் என்பது நீங்கள் கேட்காமல் கடவுள் தருவதே அனைத்தும் சிறப்புடையதாக இருக்கும்.

நீங்கள் கேட்கவேண்டும் என்று நினைத்தால் கடவுளை மட்டுமே கேளுங்கள் எல்லாம் நிறை உடையதாக இருக்கும்.

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer: Castrol, SERVO, MAK Lubricants, Shell Lubricants, MOTUL, AMARON, SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
9843440806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG. REALLY LONG.









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

வாழவைக்கும் "வாழை"

விருந்து என்றால் வாழை இலையில் பரிமாறுகிறார்களே அதற்கு ஏன் வாழை இலையை தேர்ந்தெடுத்தார்கள் என்று சிந்தித்திருக்கிறீர்களா?

அதற்கு பல காரணங்கள் இருந்தாலும் முதல் காரணம் வாழை இலை சமைத்த உணவில் ஏதாவது நஞ்சு இருந்தால் அதை நீக்கிவிடும். நம்ப முடியவில்லையா? இன்றும் கிராமங்களில் பாம்பு கடித்தால் முதலுதவியாக வாழை மட்டையில் இருந்து சாறு பிழிந்து தருவார்கள்.

அதற்காகத்தான் பெருவாரியாக மக்கள் கூடும் கோயில் திருவிழாக்கள், மற்றும் திருமணம், இன்னும் சொல்லப் போனால் சில பகுதியில் இறப்பு வீடுகளிலும் கூட முதலுதவியாக இருக்கவேண்டும் என்று தயாராக வாழை மரத்தை கட்டிவைப்பார்கள்.

திருமணப் பந்தலிலும் வாழை மரம், இடுகாட்டுப் பாடையிலும் வாழை மரம், மக்கள் கூடும் எந்த திருவிழாக் கூட்டங்களிலும் வாழை மரம் என்று எங்கெங்கு காணினும் வாழை மரத்தை வைத்தார்கள் தொல் தமிழர்கள்.

அதாவது நச்சு முறிப்புக்கு, முதலுதவியாய் இருக்கும் என்றுதான் அவ்வாறு செய்து வைத்தார்கள் .

எத்தகைய அமங்கலமும் நடக்காமல் இருந்தால் தானே அது மங்கலம்.

இவ்வாறு தொல் தமிழ் மக்கள் எதையும் அறிவியல் பூர்வமாகவே செய்திருக்கிறார்கள் .

வாழை இலையில் உண்பது நஞ்சு நீக்க மட்டும் இல்லாமல், நமது முன்னோர் உணவு பரிமாறுவதற்கு வாழை இலையைத் தேர்ந்து எடுத்ததற்கான காரணம்

வாழை இலையில் ஆன்டி ஆக்சிடன்ட் அதிக அளவில் இருக்கிறது. என்பதால்தான். தினமும் வாழை இலையில் உணவு உண்டால் உடலின் செல் சிதைவு ஏற்படாமல் இளமையுடன் இருக்க முடியும்.

அதோடு மன அழுத்தம், புற்றுநோய் மற்றும் இதய நோய்களும் தடுக்கப்படுகின்றன. வாழை இலையில் இருக்கும் Polyphenol, செல்களில் உள்ள டி.என்.ஏவை கதிர்வீச்சுகளிலிருந்து பாதுகாக்கிறது.

சிறுநீரகக் கல்லுக்கு வாழைத்தண்டு சாறு உகந்தது என்பது போல, வாழை இலையும் சிறுநீரகம் மற்றும் விதைப்பை தொடர்புடைய பிரச்னைகளிலிருந்து நம்மை பாதுகாக்கிறது. வாழை இலையில் உள்ள பச்சையம் நோய் எதிர்ப்பு சக்தியாகவும் விளங்குகிறது.

சூடான சாப்பாட்டை வாழை இலையில் பரிமாறும்போது அந்த சூட்டில் இலை லேசாக வெந்து இலையின் பச்சையத்தில் உள்ள நிஷ்ரீஹ்ஜீலீமீஸீஷ்ரீ சாப்பாட்டில் கலந்து விடும். இதன் மூலம் அதில் உள்ள விட்டமின் ஏ, சிட்ரிக் அமிலம், கால்சியம் மற்றும் கரோட்டின் ஆகியவை நமக்குக் கிடைக்கின்றன.

வாழை இலையின் சிறப்பம்சம் அதன் குளிர்ச்சித் தன்மை. மரத்திலிருந்து அறுத்தெடுக்கப்பட்ட பின்பும் கூட வாழைஇலை ஆக்சிஜனை

வெளியிட்டுக்கொண்டே இருக்கும்.

வாழை இலையில் வைக்கப்படும் கீரைகள், காய்கள், பழங்கள், பூக்கள் ஆகியவை விரைவில் வாடாது. வாழை இலையில் சாப்பிடுவதால், இளநரை வராமல் நீண்டநாட்கள் தலைமுடி கருப்பாக இருக்கும்.

தீக்காயங்களுக்கு ஆளானவர்களை வாழை இலையில் தான் படுக்க வைப்பார்கள். வாழை இலையின் குளிர்ச்சியும் அது வெளியிடும் ஆக்சிஜனும் தீப்புண்ணுக்கு இதமாகவும், விரைவாக காயங்களை ஆற்றக் கூடியதாகவும் இருக்கிறது.



வாழை இலை சருமத்தில் ஒட்டாது மற்றும் நோய்த்தொற்று ஏற்படுத்தாது என்பதால் தீக் காயங்கள் ஏற்பட்டவர்களுக்கு அரும ருந்தாக இருக்கின்றது. தீக்காயம் பட்ட வரை வாழை இலையில் கிடத்துவதை கண்டிருப்பீர்கள். வாழை இலை படுக்கையும், வாழைத்தண்டுச் சாறும், வாழைக்கிழங்கின் சாறும் நல்லதொரு நச்சு முறிப்பான்கள் ஆகும்.

மேலும் தீக்காயங்கள், சின்னம்மையால் பாதிக்கப் பட்டவர்களை வாழை இலையில் தேன் தடவி படுக்க வைக்க வேண்டும். இவ்வாறு தினமும் ஒரு சில மணிநேரம் வாழையிலையில் தேன் தடவி படுக்க வைப்பதன் மூலம் விரைவாக தீக்காயங்களிலிருந்து குணம் பெறலாம்.

இயற்கை மருத்துவத்தில் வாழை இலை குளியல் சிறப்பானது, உடலில் குறைந்த ஆடைகளுடன் இருக்க வைத்து உடல் முழுவதும் வாழை இலை போர்த்தி கட்டிவிட்டு மிதமான சூரிய வெப்பத்தில் சில மணி படுக்கவைத்துவிடுவார்கள், உடல் முழுவதும் தோலில் அடைபட்டிருக்கும் அனைத்து நுண்ணிய துவாரங்களை மீண்டும் திறக்க வைத்து, தோல் மூலமாகவும் நம்மை சுவாசிக்க வைக்கும் .இது ஒரு சிறப்பானதொரு தொன்மையான தமிழர் இயற்கை சிகிச்சை முறையாகும்.

வாழை இலையில் சாப்பிடுவதால் உடலுக்கு பல நன்மைகள் ஏற்படுகிறது என்பதோடு மட்டுமல்லாமல், சாப்பிட்டு முடித்த பின் வாழை இலை கால் நடைகளுக்கு உணவாகவோ, நிலத்துக்கு உரமாகவோ மாறிவிடுகிறது .

வாழை மரத்தின் அடி முதல் நுனி வரை அனைத்து பாகங்களுமே நமது வாழ்வியலோடு கலந்த பயன்பாடுகள் உள்ளவைதான். எனவே நாம் இனியாவது பிளாஸ்டிக், பேப்பர் பயன்பாடுகளை தவிர்த்து வாழை இலையினை உபயோகித்து நலம் பெறுவோம்.

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

தொடர் –50

குருவைத் தேடி

எங்களது குழந்தை அமிர்தா பிறந்து ஒரு வருடத்தில் எனது வியாபாரம் நலிவடைந்து பொருளாதாரக் கஷ்டம் எம்மை வெகுவாக பாதித்தது. மிகவும் சிரமப்பட்டு காலம் தள்ள வேண்டியிருந்தது. அந்த கால கட்டத்தை மேலும் சிரமமாக்கி என்னை அவரை நோக்கி இழுக்க சற்குரு சாயி திருவருள் கொண்டார்.

அன்று கடையில் சுத்தமாக வியாபாரம் இல்லை. எல்லா செலவும் போக நாற்பது ரூபாய் கையிருப்பு, இரவு பத்து மணிக்கு கடையைப் பூட்டிவிட்டு மிகுந்த மனவேதனையில் வீட்டிற்கு வருகிறேன். வாசலில் என் மனைவி குழந்தையை வைத்துக்கொண்டு நின்றிருக்க, குழந்தை வீறிட்டு அழுது கொண்டிருந்தது.

என்னவென்றே தெரியவில்லை. மாலையில் இருந்து அழுது கொண்டிருக்கின்றாள். எது கொடுத்தாலும் சாப்பிடவும் இல்லை என்றாள் என் மனைவி. நான் குழந்தையை வாங்கிக்கொண்டு எவ்வளவோ சமாதானம் செய்து பார்க்கின்றேன். அழுகை நின்றபாடில்லை. நேரம் செல்ல, செல்ல குழந்தை வாடிப்போய்விட்டாள்.

மணி இரவு 11 ஆகிவிட்டது. குழந்தையை ஏதாவது பூச்சி கடித்திருக்குமோ என்று பார்த்தால் கடிபட்ட அடையாளம் ஒன்றும் இல்லை. ஆனால் குழந்தையின் உடல் நீலநிறமாக மாறியிருந்தது. எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கையில்



பணம் வேறு இல்லை. இந்த இரவில் எங்கு செல்வது.

குடந்தையில் நிறைய உறவினர்கள் இருந்தாலும் நாங்கள் யார் வீட்டிற்கும் சென்றதில்லை. எனது தாய், என் சகோதரிக்கு உதவியாக சென்னையில் வசிக்கின்றார்கள். எனவே யாரை உதவிக்கு கூப்பிடுவது என்று குழம்பித் தவித்தேன். கடைசியில் ஆபத்துக்கு பாவமில்லை என்று ஒரு உறவினருக்கு போன் செய்து விவரத்தைச் சொன்னேன்.

அவர் நகரில் மிகுந்த செல்வந்தர். எங்கள் வீட்டில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் அவரது வீடு உள்ளது. அவர் நினைத்தால் கார் எடுத்துக்

கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்து உதவி செய்திருக்க முடியும்.

ஆனால் பாபா நினைக்கவில்லையே! பாபா நினைத்திருந்தால் அவர் காரை எடுத்து வந்திருக்கலாம். ஆனால் பாபா அந்த துன்பத்தை நான் முழுமையாக அனுபவிக்க வேண்டும். அதன்மூலம் என்ற கர்மா தீர வேண்டும் என்று முடிவு செய்கின்றார் போலும்.

அதனால், உறவினர் கூறினார். இரவு வெகு நேரமாகிவிட்டது. நீங்கள் என் வீட்டிற்கு வந்து விடுங்கள். எங்கள் வீட்டிற்கு அருகில் மருத்துவர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் காட்டலாம் என்று கூறிவிட்டு தொலைபேசியை வைத்து விட்டார்.

அந்த உறவினர் வீட்டிற்கு அருகே தான் அரசாங்க மருத்துவமனை இருக்கின்றது. அவர் உதவி செய்தால் பார்ப்போம். இல்லை என்றால் அரசு மருத்துவமனைக்குச் செல்வோம் என்று நானும், என் மனைவியும் குழந்தையை தூக்கிக்கொண்டு அந்த நடு இரவில் நடக்கத் துவங்கினோம்.

ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்திருப் போம். குழந்தையின் அழுகுரல் வீதி எல்லாம் ஒலிக்கின்றது. நல்ல வேளையாக எங்களைப் பார்த்து ஒரு ஆட்டோ ஓட்டுனர் வண்டியை நிறுத்தி விசாரித்தார். நாங்கள் விபரத்தைக் கூறி போகவேண்டிய முகவரியைக் சொன்னதும் இருபது ரூபாய் மட்டும் வாங்கிக் கொண்டு எங்களை உறவினர் வீட்டில் இறக்கி விட்டார்.

மணி 12 உறவினர் பாதி தூக்கத்தில் எங்களை அழைத்துக் கொண்டு நாலாவது வீட்டில் இருந்த மருத்துவர் வீட்டிற்குச் சென்றார். மருத்துவர் பாதி தூக்கத்தில் எழுந்து வந்து பார்த்தவர் குழந்தைக்கு ஒரு ஊசி போட்டுவிட்டு நீங்க உடனே அரசாங்க மருத்துவமனைக்கு கொண்டு செல்லுங் கள் என்று கூறி அனுப்பி விட்டார்.

உறவினரோ எங்களை வீட்டிற்கு அழைத்து வந்து, சாவகாசமாக குழந்தையை படுக்க வைத்து விட்டு, குழந்தையைப் பார்த்தால் எனக்கு நம்பிக்கையில்லை. உடனடியாக உன் மனைவியின் வீட்டிற்கு தகவல் கூறிவிடு என்று கூற, எனக்கு கோபம் தலைக்கேற, கோபத்தை காட்டமுடியாமல், தயவு செய்து எங்களை அரசு மருத்து வமனையில் விட்டுவிடுங்கள் என்று கூற, அவரும் அவரது காரில் எங்களை அரசு மருத்துவமனையில் கொண்டு விட்டார்.

இரவு மணி 1 நாங்கள் குழந்தை யோடு உள்ளே வருவதைப் பார்த்த இரவு பணியில் இருந்த அரசு மருத்துவர் உடனடியாக பரிசோ தனை செய்து ஏதோ விசப்பூச்சி கடித்திருக் கின்றது. என்று கூறி மருத்துவம் செய்து, இரவு முழுவதும் குழந்தையை தூங்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். என்று கூறிச் சென்றார்.

இரவு நேரம் என்பதால் பெண்கள் வார்டில் தங்க வைக்கப்பட்டார்கள். இரவு முழுவதும் என் மனைவி குழந்தை யை தூங்காமல் பார்த்துக் கொண்டு, தானும் தூங்காமல் இருந்தார்கள். எங்களை கொண்டுவந்து விட்டுச் சென்ற உறவினர் திரும்ப வரவே இல்லை. மறுநாள் காலையில் குழந் தைக்கு ஓரளவு பரவாயில்லை.நானும் மனைவியும் குழந்தையை அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தோம்.

இந்நிகழ்வில் மூலம் நம்மை சுற்றி உதவிக்கு யாருமில்லை என்பதையும், இவ்வுலகத்தில் உனக்கு உதவி செய்ய நான் இருக்கின்றேன் என்பதையும்



பாபா எனக்கு அறிவுறுத்துவதாக நான் எடுத்துக் கொண்டிருந்தால் என் விதியை பாபா மாற்றியிருக்கக் கூடும். ஆனால் என்னால் அப்படி எடுத்துக் கொள்ள முடியவில்லை.

என்னை நம்பி வந்த பெண்ணையும், என்னால் இந்த உலகத்திற்கு கொண்டு வந்த குழந்தையையும் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவும், ஏற்கனவே என் தாயும், சகோதரியும் சென்னையில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதற்காக நான் சென்னை செல்ல முடிவெடுத்தேன்.

ஆனால் அதுவே பாபாவின் சித்தம் என்பதை நான் இன்று உணர்வதற்கு அன்றே என் வாழ்வில் இரண்டு சம்பவங்கள் நடந்தன. ஆனால் அந்த சம்பவங்களை அன்று என்னால் உணரமுடியாதவாறு என் கர்மா என்னை அந்நிழ்வுகளை துன்பமாக உணரச்செய்தன.

குடந்தையை விட்டு வேறு ஊருக்குச் செல்வது என்பது எனக்கு எனது உயிரை விட்டுச் செல்வதாகும். அந்தளவிற்கு குடந்தை எனது உயிர். மூன்று வயதில் இருந்து என்னை வளர்த்து ஆளாக்கிய மண் அல்லவா? அதை தவிர எனது குருநாதர்கள் எல்லாம் அங்கேயே இருக்கின்றார்கள்.

அதை எல்லாம் விடுத்து சென்னை சென்றால் என்னால் பிழைக்க முடியுமா? என்ற பெரும் குழப்பத்தோடு முதலில் குடந்தை மவுனகுரு சுவாமிகளின் அதிர்ஷ்டானம் சென்று வரலாம் என்று புறப்பட்டேன். அன்று காலையில் இருந்து நல்ல மழை. நான் மடத்திற்கு வந்த உடன் பெரும் காற்றுடன் மழை பெய்ய ஆரம்பித்தது.

மடத்தில் யாருமில்லை. சுவாமி களின் முன்னால் கண்ணை மூடிக் கொண்டு நிற்கின்றேன். ஒரு பெரும் காற்று ஒன்று அடிக்க, சுவாமிகளின் கர்ப்பக்கிரக கதவு படார் படார் என்று தானாக அடித்துக் கொண்டு மூடுகின்றது. மூடிய கதவில், கதவை செய்து கொடுத்த உபயதாரர்களின் பெயரைப் போட்டு அதற்கு கீழே, சென்னை என்று போட்டிருக்கின்றது.

நான் கண்களை திறந்து பார்க் கின்றேன். என் கண்களுக்கு சென்னை என்பது மட்டும் தான் தெரிகின்றது. மனம் ஆனந்தப்பட்டது. அதை என் குருவின் ஆசியாக எடுத்துக் கொண்டேன். உடனே மழையும் நின்று விட்டது. நான் அங்கிருந்து கொட்டையூர் ஆஸ்ரமம் வந்து எனது குருநாதர் ஸ்ரீ இராமதாஸ் அண்ணாவை சந்திக்கின்றேன்.

அவர் எப்போதும் போல் என்னை அருகே அழைத்து என் தலையில் கை வைத்து ஆசி புரிகின்றார். திருநீறு எடுக்கச் சொல்லி என் நெற்றியில் இட்டு என்னைப் பார்த்து சிரிக்கின்றார். நான் அவரின் காலடியில் அமர்ந்து

அவரையே பார்க்கின்றேன். அவர் என்னைப் பார்த்து மீண்டும், மீண்டும் சிரிக்கிறார். இவர் போன்ற ஒரு குருவை விட்டுவிட்டு நான் எப்படி சென்னை செல்வது. என் மனம் ஏக்கத்தில் உள்ளுக்குள் அழுதது.

சட்டென்று என் மனம், இல்லை, நான் சென்னை செல்லப் போவது இல்லை. என்று உறுதியாய் முடிவெடுத்தது. என்ன வந்தாலும் உங்களை விட்டு நான் வேறு எங்கும் செல்ல மாட்டேன் என்று உறுதி ஏற்றுக் கொண்டு, அண்ணாவின் பாதத்தை தொட்டு வணங்கிவிட்டு, அவரைப் பார்த்தேன்.

அண்ணா மறுபடியும் அதே குழந்தை சிரிப்பை உதிர்த்தார்கள். நான் புறப்படுகின்றேன் சுவாமி என்று அவரைப் பார்த்து கூறினேன். அப்போதும் சிரித்துக் கொண்டே தலையை மெதுவாக ஆட்டினார்கள். நான் தயங்கியபடியே மெதுவாக திரும்பி அறைக் கதவை தாண்டும் போது அண்ணாவின் குரல் மென்மையாக "எங்கே போறீங்க" என்றது.

நான் திரும்பிப் பார்க்க, அதே மென்மையான குரலில் "சென்னைக்குத் தானே" என்றார். அண்ணா. என் கண்கள் சட்டென்று கண்ணீரைக் சொரிந்தன. ஓடிச்சென்று அண்ணாவின் காலைப் பிடித்துக் கொண்டேன்.

அழவேண்டாம் எல்லாம் நல்லதுக்குத்தான். அம்மா எங்க இருக்கிறாங்களோ, அங்கேதான் நாமளும் இருக்கணும். என்றவர் அருகே இருந்த கற்கண்டை எடுத்து எனக்கு கொடுத்தார். பிரசாதமாக அதைப் பெற்றுக் கொண்டு வெளியே வந்து ஆற்றங்கரையில் வந்து அமர்ந்து கொண்டு விம்மி, விம்மி, அழுதேன்.

இரண்டு இடங்களில் இருந்தும்



எனக்கு அனுமதி கிடைத்து விட்டது. இருந்தாலும் மனம் என்னவோ, இவ்வளவு நாட்களாய் வாழ்ந்த ஊரை விட்டு செல்ல போகிறோம் என்பதை நினைத்துப் பார்க்கவே தயங்கியது.

அடுத்துவந்த ஒரு மாதத்தில் எல்லாவற்றையும் சமாளித்து விட்டேன். என் மனைவியைத் தவிர, அவர்களுக்கோ குடந்தையை விட்டு வர மனமில்லை. இறுதியாக பாபா நினைத்ததே நடந்தது.

ஆம் என் வாயால் என் மனைவியிடம், நீ சீரடி சென்று பாபாவை தரிசிக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றாய் அல்லவா, அதற்கு சென்னை சென்று விட்டால் சென்னையில் இருந்து சீரடி பக்கத்தில் இருக்கிறது. சென்னைக்கு சென்று விட்டால் நாம அடிக்கடி சீரடிக்குச் செல்லலாம்.நாம் இங்கேயே இருந்தால் இங்கிருந்து சீரடி அதிக தூரம். நம்மால் சீரடிக்கு போக முடியாது. என்று கூறினேன். உண்மையில் சென்னையில்



இருந்து சீரடி பக்கமா, தூரமா என்பது எனக்குத் தெரியாது.

என் மனைவி யோசித்தாள், அப்படியானால் சென்னைக்கு சென்று விட்டால் என்னை சீரடிக்கு கூட்டிச்செல்ல வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒத்துக் கொண்டாள். ஒருவாறாக பாபாவின் திட்டப்படி குடும்பத்துடன் சென்னை வந்து சேர்ந்தோம். அடுத்த ஏழாவது நாள் தினம் 100 ரூபாய் சம்பளத்துடன் எனக்கு கணக்குப்பிள்ளை உத்யோகம் கிடைத்தது. ஒத்துக் கொண்டு வேலைக்குச் செல்ல ஆரம்பித்தேன்.

நான் வேலைக்குச் சென்ற முதல் வருடத்திலேயே, என் முதலாளி கடையை இன்னொரு முதலாளிக்கு விற்றுவிட, அந்த முதலாளி என்னுடைய செயல்பாட்டை கவனித்து என்னை அவருடைய புதிய நிறுவனத்தில் தலைமை பொறுப்பைக் கொடுத்து என்னை அவருடைய பங்குதாரராக சேர்த்துக் கொண்டார்.

நாளடைவில், எங்கள் தொழில் அயல்நாடுகளில் விரிவடைந்தது. எனது பங்குதாரர் அயல்நாட்டில் உள்ள தொழிலை பார்த்துக் கொள்ள, இந்தியாவில் நான் மட்டுமே தொழிலை பார்த்துக் கொள்ளும்படி ஆனது.

பாபா என்னை தன் பக்கம் திருப்புவதற்கு என் வாழ்வில் ஏகப்பட்ட உயர்வுகளை உடனுக்குடன் தந்து என்னை பொருளாதாரத்தின் உச்சத்தை தொட வைத்தார். சாப்பிடவும், தூங்குவதற்கும் கூட நேரமில்லாமல் உழைத்தேன். ஓட்டம்,ஓட்டம், ஓட்டம். என் வாழ்வில் ஆறு ஆண் டுகள் எப்படி போனதென்றே தெரிய வில்லை. எங்களுக்கு அட்சயா என்ற இன்னொரு மகளும் பிறந்தாள். நான் மெல்ல, மெல்ல, பாபாவை நம்ப ஆரம்பித்தேன். எல்லோரையும் போல, என் தொழிலுக்கு உதவுபவராக, என் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் கடவுளாக, ஆயினும் என் சற்குருவாக அல்ல.

நான் முதலில் என் பங்குதாரரிடம் இருந்து பிரிந்து தனியாக தொழில் ஆரம்பிக்கும்போது, மகாராஷ்டிர மாநிலத்தில் இருந்து எனக்கு மூலப் பொருட்கள் வரும். மூலப் பொருட்கள் அனுப்பும் கம்பெனியின் பெயர் பெரும்பாலும் பாபாவின் பெயராகவே இருக்கும். சாய்கிருபா டிரேட்டர்ஸ், சாய் மகராஜ் அன் சன்ஸ், சாய்ராஜா டிரேட்டர்ஸ், இந்த பெயர்கள் எல்லாம் என்னை ஏதோ ஒரு வகையில் உறுத்திக் கொண்டே இருந்தன.

மூலப்பொருட்களை எடுத்துவரும் லாரியின் ஓட்டுனர், ஏதாவது ஒரு வகையில் என்னிடம் பாபாவைப் பற்றி பேசுவார்கள். சிலர் பாபாவின் பிரசாதம் என்று லட்டு, ரட்சை, உதி என்று கொண்டு வந்து தருவார்கள். இறுதியாக நீங்கள் ஏன் சீரடிக்கு வரக்கூடாது என்று கேட்பார்கள்.

- (தொடரும்...)

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா"

"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா திகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; **சுந்தர்சாய், 9789404451**

தொடர் –14

சாய் சரவணன்

"அதி தேவதை"

அதே சமயம் நானா அங்கே வந்து, வா, சுந்தராபாயி வா, என்று அழைக்க அவர் அழைத்ததை சரியாகக் கவனிக்காமல் தெய்வீக மயக்கத்தில் சுந்தராபாயி துவாரகா மாயியை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

சாயி பாபா அமர்ந்த நிலையில் இருக்க, தன்னை ஈர்த்து இழுத்த காந்த சக்தி தன் எதிரே இருப்பதை உணர்ந்து மார்போடு அணைத்திருந்த கிருஷ்ண விக்கிரகத்தை,துவாரகாமாயியின் படிகளில் வைத்து விட்டு, சாயி பாபாவை வீழ்ந்து வணங்கி எழுந்து தன் பார்வையை மீண்டும் பாபாவின் மேல் செலுத்தினாள்.

சுந்தராபாயியின் பார்வையில், பாபா தெரியவில்லை. பாபாவிற்குப் பதில் பட்டு பீதாம்பரம் உடுத்தி சுந்தரரூபனாக, இடுப்பில் புல்லாங்குழல் செருகி இருக்க, மார்பில் முத்துமணி மாலை தவழ, நீலமேக சியாமள ஸ்ரீ கிருஷ்ணன் காட்சி தந்தான். அடுத்த நொடியே பண்டரியில் காணும் ஸ்ரீ விட்டலனை சாயிபாபா ரூபத்தில் கண்டு ஆனந்தப்பட்டாள்.

கண்டேன் என் விட்டலனை, என் சற்குருநாதனை, என மனதால் நினைந்து துதித்தாள். இந்தக் காட்சியைக் காண வல்லவா தவமாய் தவமிருந்தாள். விட்டலனது வாக்கும், ஞானத்தேவரின் வாக்கும் பலித்தது என எண்ணி தன்னை மறந்து மிக உயர்ந்த தெய்வீக நிலைக்குச் சென்றால் சுந்தராபாயி.

சற்குருவினுள், பகவானைத் கண்ட சுந்தராபாயி தன்னை மறந்து தன் கைகளில் இருந்த ஏக்தார் என்ற இசைக்கருவியை மீட்ட ஆரம்பித்தாள். ஏக்தாரில் இருந்து வரும் இசைக்கு தக்கவாறு தன் இனிமை நிறைந்த குரலால் மீராவின் பாடல்களைப் பாட ஆரம்பித்தாள்.

ஒன்று, இரண்டு, மூன்று என தொடர்ந்து பாடல்களைப் பாடிக் கொண்டே இருந்தாள். காணக் கிடைக்காத தன் சற்குரு நாதனை கண்டு விட்டபடியால் மேலும், மேலும் தொடர்ந்து பாடினாள்.

குருவையே தியானம் செய்வேன். குருவைத்தவிர வேறு கதியறியேன்! சற்குருவையே பூசை செய்வேன். அதுவே என் பிறவிப் பயன்.

சற்குருவிற்கு சேவை செய்வதே எனது தவமாகும். குருவே பரப்பிரம்மம்! குருவையே தியானம் செய்வீர்! ஜெய் ஜெய் விட்டலா! ஜெய்ஹரி விட்டலா!

எனத் தொடர்ந்து பாடிக்கொண்டே இருந்தாள். துவாரகாமாயியில் அமர்ந்திருந்த யாவரும் கற்சிலையைப் போல் தன்னை மறந்து அவளது இசை மற்றும் குரலால் காந்தம் போல் ஈர்க்கப்பட்டு மெய்மறந்த நிலையில் அமர்ந்திருந்தனர். அவர்கள் மட்டுமா என்றால் இல்லை. சீரடியில் வாழும் பிராணிகளும், பறவைகளும்தான்.

ஆடுவதும் பாடுவதும் சுந்தராபா யானாலும், ஆட்டுவிப்பது சற்குருவல்லவா? இரவு நேரம் நீண்டு கொண்டே சென்றது. தீபச்சுடரின் ஒளியில் துவாரகாமாயியில் சாயி பாபா அமர்ந்திருப்பதும், சுந்தராபாயி ஆடிப் பாடிக் கொண்டிருப்பதும் தேவலோகத்து இறைக் காட்சி போல் பிரமிப்பாய் இருந்தது.

சற்குரு சாயிபாபாவின் தெய்வீக சக்தியும், சுந்தராபாயின் தெய்வீகக்

குரலும் சேர்ந்து பக்தர்களை தெய்வீக சாந்நித்தியத்தை உணரச்செய்தது. சுந்தரா பாயி மெல்ல தன் ஆட்டத்தையும், பாட்டை யும் நிறுத்தி, ஏதுமறியாத எங்கள் யாவரை யும் கரை சேர்க்க வந்த என் சற்குருநாதா எனத் துதித்து, " சாயிநாத் மகராஜிகீ ஜெய்" என ஜெய கோபம் எழுப்பினாள்.

சாயிநாத் என்ற பட்டமும், மகராஜ் என்ற மரியாதையையும், முதன் முதலில் சுந்தராபாயியே பாபாவிற்கு வழங்கினார்.

பிறகு சாயிநாதரின் திருவடிகளை தன் கண்ணீர் கொண்டு அபிசேகம் செய்தாள். பாபாவின் திருவடிகளில் தன் தலையை வைத்து பரிபூரணமாக சரணாகதி அடைந்தாள். சாயிநாதரைப் பார்த்து, "பிரபு என்னை ஏன் இவ்வளவு நாட்களாக காக்க வைத்தீர்கள்" என்றாள். சாயிநாதனோ, உன்னைக் காண நானும் காத்துக் கொண்டு தான் இருந்தேன் என்றார்.

சுந்தராபாயி சீரடியை பிருந்தாவனமாக வும், பண்டரிபுரமாகவும் கண்டாள். அதில் உறையும் தெய்வம் ஸ்ரீ கிருஷ்ணராக, ஸ்ரீ பண்டரிநாதராக, ஸ்ரீ சாயிநாதரையே கண்டாள். எல்லா தெய்வங்களையும் சாயிநாதரின் மூலமே தரிசனம் செய்தாள். ஆனந்த நிலையில் பாபாவையே பிரேமை யுடன் தரிசனம் செய்து கொண்டிருந்தாள். மீண்டும் பாபாவின் பாதத்தில் தன் தலையை வைத்து "சீரடியே என் பண்டரிபுரம்" என்றாள்.

அவள் தன் தலையை பாபாவின் திருவடியில் சமர்ப்பிக்கும் போதே குருதட்சணையாக தன்னையே ஒப் படைத்தாள். பாபாவின் அருளால் "நான்" அற்றுப்போகும் நிலையான அத்வைத நிலையை அடைந்து, பிறவியின் இலக்கான ஆத்மானுபூதியை பெற்று வாழும் காலத்திலேயே ஜீவன் முக்தி பெற்ற நிலையை அடைந்தாள்.

இவையாவும் சற்குரு சாயிநாதனின்



தரிசனம் ஒன்றினாலேயே கிடைக்கப் பெற்று தன் பிறவிப்பயனை அடைந்தாள் சுந்தராபாயி. அதற்குத்தக்கவாறு தன் சற்குருவை அடையும் முன் ஆன்மீகப் பக்குவம் அடைந்திருந்தாள்.

ஸ்ரீ இராதா கிருஷ்ணரின் வடிவ மாகும் தெரிந்த சுந்தராபாயை அனைவரின் முன்பா கவும், வா! வா! இராதா கிருஷ்ணமாயி! வந் தாயா, நீ கிருஷ்ணனை விட்டு பிரியாத வளாக இருப்பதால் உன்ன இனி இராதாகிருஷ்ணமாயி என்ற பெயர் கொண்டே அழைப்பேன் என்று இராதாகிருஷ்ணமாயி என்ற நாமத்தை சுந்தராபாயிக்குச் சூட்டினார். இனி நாமும் இராதாகிருஷ்ணமாயி! என்றே அழைப்போம்.

நம் சாயிநாதர் ஒரு போதும் தன்னை கடவுள் என்று கூறிக்கொண்டதில்லை. இருப்பினும் பல அடியவர்களுக்கு, தான் கடவுள் என்பதை உணர்த்தும் வகையில் பல லீலைகளைப் புரிந்தார். எனினும், சாயிநாதரை சிறந்த ஞானி என்ற வகை யில்தான் பக்தர்கள் கண்டார்கள். எனினும் நம் இராதாகிருஷ்ணமாயி பாபாவின் உண்மையான சுய அடையாளத்தை அவர் அருளால் கண்டுகொண்டு இந்த சீரடியே



பண்டரிபுரம், சாயியே என் விட்டலன், எனப் பூரணமாக நம்பினாள்.

அவளது நம்பிக்கையை பாபா ஆணித் தரமாக உண்மை என பல சமயங்களில், உணர்த்தி வந்த லீலைகள் யாவையும் இனிமேல்தான் காணப்போகின்றோம். சுந்தராபாயாக வந்தவளை, பாபா இராதாகிருஷ்ண மாயி என்ற திருநாமத்தை சூட்டியதைக் கண்டனம்.

மேலும் சாயிநாதரான் தரிசனம் ஒன்றினாலேயும், அவரது திருவடியை ஸ்பரிசம் செய்த பிரேமையாலும், இராதாகிருஷ்ணாயி, தன் வாழ்வின் பிற விப்பயனாக ஆத்ம ஞானத்தை அடைந்து சாயி என்ற பிரம்மத்துடன் கலந்த ஐக்கிய பாவத்துடன் இருந்தாள் என்பதையும் கண்டோம்.

இவை எல்லாம் சாத்தியமாகுமா? என்றால், துக்காராம், நாமத்தேவர், இராமகிருஷ்ண பரமஹம்சர், மீராபாய், ஜனாபாய், போன்ற மகான்கள் கடவுளை நேரில் காணும் பாக்கியம் பெற்று ஆனந்த நிலையில் வாழ்ந்தனர். அப்படிப்பட்ட பக்தர்களை தன்னுடன் இணைத்துக் கொண்டு ஜீவன்முக்தி நிலையை அடைய பகவான் கருணை கொண்டு சற்குருவை அடைய அனுக்கிரகம் செய்கின்றார்.

சற்குருவின் அருளைப் பெற்றவுடன், அவர்களது நிலை பேரானந்த நிலையில் இருக்கும். பகவானுக்கும், சற்குருவிற்கும் பேதம் என்பது எள்ளளவும் இல்லை என்பது புரியும். குருவே இறைவன் என்று நம்பிக்கை வருவது அவ்வளவு சாத்தியம் இல்லை. அந்த உச்ச நம்பிக்கையைப் பெற ஒருவன் தன் குருவே கதி என்றிருக்க வேண்டும்.

சாயிநாதர் இவ்வுலகம் பொருட்களை மட்டும் தருவதில் வள்ளல் இல்லை. ஆன்மீகத்தின் உச்சமான மட்டத்தை தரவல்ல கருணாமூர்த்தி ஆவார். சாயிநாதருடைய எல்லையற்ற கருணையால் வாழும் போதே ஜீவன்முக்தி என்ற பிறவிப் பயனை அடைந்து வாழ்ந்த ஆத்மாக்கள் ஒரு சிலரே! அதில் முதலாவதாக, ஸ்ரீ இராதாகிருஷ்ணாயி, உபாசினி மகராஜ், சிவதாயம்மா, சிவநேசன் சுவாமிகள், சரணானந்த சுவாமிகள், நரசிம்ம சுவாமிகள் எனக் குறிப்பிட்ட ஆத்மாக்களையே கூற முடியும்.

இந்த ஆத்மாக்கள் சாயி சேவையில் ஈடுபடுத்தி, அவர்களால் பிறவிப்பயன் பெற்று நற்கதியடைந்த பக்தர்கள் பலர் உண்டு.

இந்நூல் ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயியை பற்றியதால், சீரடிக்கு வந்த அன்னையின் வாழ்வு, மற்றும் சேவை, பிரேம பக்தி, பற்றியே விரிவாக காண இருக்கின்றோம். மீராபாய், ஜனாபாய், அக்காமகாதேவி, கானோபாத்ரா, சாரதா தேவி, காரைக்கால் அம்மையார், முக்தா பாயி என இன்னும் எண்ணற்ற பக்தைகள் குருபக்தியை விடாது வாழ்ந்து பல அடியவர்களுக்கு வழிகாட்டியாக திகழ்ந்தார்கள். அவ்வழியில் நம் இராதாகிருஷ்ணாமாயியும் அசைக்க முடியாத இடத்தைப் பெறுகிறார்கள்.

- (தொடரும்...)

சிறந்த பிரார்த்தனை!

நான் உன்னையே நினைத்துக் கொண்டிருக் கின்றேன். உனது புனித நாமத்தையே தியானித்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு தெரிந்ததெல்லாம் அவ்வளவே. மற்றது எல்லாம் நீயே அறிவாய்.

நான் எதையும் வேண்டவில்லை. உன்னிடம் எதைக் கேட்கலாம் என்பது கூட எனக்குத் தெரியாது. தவறானதைக் கூட நான் கேட்கக் கூடும். அல்லது நான் கேட்பது மிகக் கொஞ்சமாகக்கூட இருக்கலாம்.

நீ எனக்கு அதிகமாக கொடுக்க விரும்பினால்கூட நான் கொஞ்சமாக வேண்டிக்கொண்டால் அவ்வளவே கொடுப்பாய். ஆகையால் அது உன்னைப் பொறுத்தது. எது நல்லது என்பதையும் எனக்கு என்ன கொடுக்க வேண்டும் என்பதை நீ அறிவாய்.

நீயே என் தந்தை. நீ என் என் இல்லத்தில் குடியேறுவதற்காக அதை நான் சுத்தம் செய்து கொண்டிருக்கின்றேன். நீ விரும்பியதை,விரும்பும் பொழுது கொடுத்தருள்க! எல்லாவற்றையும் உன்னிடம் ஒப்படைத்துவிட்டேன்.

இதுவே இறைவனிடம் நாம் செய்யும் மிகச்சிறந்த பிரார்த்தனையாகும். நாம் இறைவனிடம் எதையும் எதிர்பார்ப்பதோ, கற்பனை செய்வதோ, வலியுறுத்துவதோ கூடாது. நான் என் பணியைச் செய்கிறேன். நீ உன் பணியைச் செய்தருள்க என்று கூறுவதே மிகச் சிறந்த பிரார்த்தனை ஆகும்.

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

நமது இதழின் 5 ஆம் ஆண்டு துவக்க விழா



கடந்த 7.8.2022 ஞாயிறு அன்று நமது "சாய் மகராஜ் குருவை தேடி" ஆன்மீக மாத இதழின் 5 ஆம் ஆண்டு துவக்க விழா, வெகு விமரிசையாக நடைபெற்றது.

"பாராயண பகலவன்" திரு. சுந்தர் சாய் அவர்களின் தலைமையில் திரு. உதி மூர்த்தி அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்க,விழா இனிதே துவங்கியது.

காலை 8 மணிக்கு ஆசிரியர் அவர்களின் தியான நிகழ்வுடன் ஆரம்பித்த விழா 9 மணிக்கு "சாயி காணக்குயில்" திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார் அவர் களின் பஜனையுடன் தொடர்ந்தது.



காலை 10 மணிக்கு புத்தக வெளியீட்டு நிகழ்வு தொடங்கியது. இம்மாத இதழை, மாருதிபுரம் ஸ்ரீ குரு தத்த பாதுகா சேத்திர ஆலய நிறுவனர் திருமதி மஞ்சரி ரமேஷ்பாபு, அவர்கள் வெளியிட, சம்பூர்ண ஸ்ரீ ஸ்ரீபாத வல்லப சரிதாம்ருத ஆசிரியர் திருமதி. மாதங்கி பாலாஜி அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள்.

அதைத்தொடர்ந்து நமது இதழின் 5 ஆம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு, சாயி சேவகர்களில் 21 பேர்களை தேர்ந்தெடுத்து விருதுகள் வழங்கப்பட்டது.

விருது பெற்றவர்களும், அவர்கள் பெற்ற விருதுகளும்.

திரு.பாபா மாஸ்டர் அவர்களுக்கு "பண்பின் சிகரம்" திரு. சுந்தர்சாய் அவர்களுக்கு "பாராயணப் பகலவன்"

குருவருள் வேண்டி திரு. அசோக் குமார் "இறை நேசர்"

திரு.பா.செந்தில் குமார். " இறை நேசர்"

திரு. ஹரி கிருஷ்ணன். "சேவா ரத்தினம்" திரு. சாய் சரவணன்.

"அம்மையின் மைந்தன்" திரு. சம்பத் சாய் " சேவா ரத்தினம்" .திருமதி. ஜெயலட்சுமி."சாயி காணக்குயில்"

திரு. வெங்கடேசன். "சித்தர் நேசன்"

திரு. உமா சங்கர் "சாயி நேசன்"

திரு. ஆரணி ரவி "தாஸ்கணுதாசன்"

திரு.இராமமூர்த்தி "சேவா ரத்தினம்"

திரு.உதி.மூர்த்தி "சேவா ரத்தினம்"

திரு.அகஸ்டின்"நம்பிக்கை பொறுமை"

தர்மபுரி முரளி "சாயிநேசன்"

திரு.எல். காமராஜ் "முதல்வன்"

திரு. அண்ணாமலை. "சாயி நேசர்"

திருமதி மஞ்சரி மகேஷ்பாபு "மங்கையர்கரசி" திருமதி. லதாபாபு "அண்ணபூரணி" திருமதி. ஜெயந்தி முரளி "சேவா ரத்னம்"திருமதி. சரண்யா ஞானமூர்த்தி "சேவா ரத்னம்" என்ற விருதுகள்







வழங்கி கவுரவிக்கப்பட்டது.

நமது ஆசிரியர் அவர்களுக்கு, திரு சுந்தர் சாய் அவர்கள் சீரடி சாய் தலைப்பாகை அணிவித்து வாழ்த்தினார்கள். கோவை ஆவோ சாயி டிரஸ்ட் தர்மபுரி முரளி அவர்கள் ஆசிரியர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி வாழ்த்தினார்கள்.

விழாவில் திரு. உதி.மூர்த்தி, திரு.







இராமமூர்த்தி, திரு.உமா சங்கர், திரு. அண்ணாமலை, திரு.அகஸ்டின் திருமதி. சரண்யா, திருமதி. ஜெயந்தி முரளி, திருமதி. மாதங்கி, திருமதி. மஞ்சரி ஆகியோர் உரை யாற்றினார்கள்..

குருவருள் வேண்டி திரு. அசோக்குமார் விஜய் எண்டர்பிரைசஸ் திரு. ஹரி கிருஷ்ணன், மஞ்சு அசோசியேட் திரு. எல். காமராஜ், தர்மபுரி திரு.முரளி கோவை.திரு. கார்த் திகேயன், திரு. திருமலைத் குமார், திரு. ஜெயதுரை குரோம்பேட்டை PSPA பாக்ஸிங் சென்டர் திரு. அய்யாகண்ணு, திரு. இராஜ சேகர் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.

சென்னை.திரு.அண்ணா மலை, கோவை திரு.கார்த்தி கேயன் வேப்பம்பட்டு, திருமதி. சரஸ்வதி கமலக்கண்ணன் ஆகியோர் அன்னதான சேவை யினையும், குரோம்பேட்டை PSPA பாக்ஸிங் சென்டர் திரு. அய்யாகண்ணு, அவர்கள் நினைவுப்பரிசு வழங்கும் சேவையினையும், திருமதி ஜெயந்தி முரளி அவர்கள் தாம்பூலம் பை சேவை யினையும், திருமதி. திலகம் அவர்கள், உணவு தட்டு சேவையினையும், திரு. ஹரி கிருஷ்ணன் ஷாமியானா சேவையினையும் சிறப்பாக செய்து தந்தனர்.

விழாவில் பங்கேற்க அனைத்து சாயி சொந்தங் களுக்கும், சிறப்பான அன்ன பிரசாதம் வழங்கப்பட்டது. விழாவை முன்னிட்டு ஆதர வற்றோர்கள் 100 நபர்களுக்கு, அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

இறுதி நிகழ்வாக, திரு ஆரணி இரவி அவர்கள் சாயிநாத ஸ்வன மஞ்சரி ஒப்புவித்தார்கள். ஆசிரியர் திரு. ஸ்ரீராம் அவர்கள் நன்றி யுரை நிகழ்த்த விழா இனிதே நிறைவுற்றது.

5 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும்

"சாயி மகராஜ் குருவை தேடி" ஆன்மீக மாத இதழுக்கு எங்களது இதயங்கனிந்த வாழ்த்துக்கள். மேன்மேலும் பல ஆண்டு தாண்டி சாயி சேவையில் பாபாவின் அருளோடும், ஆசியோடும் பல சாதனைகளை புரிய வாழ்த்துகிறோம்.



அன்புடன்,

A S.V. Suresh Babu and family

Ponniamman medu, Chennai - 600110

தனித்தன்மை



உலகில் இரண்டு விதமான மனப்பான்மைகள் உள்ளன ஒன்று உயர்வு மனப்பான்மை. இரண்டு தாழ்வு மனப்பான்மை. இந்த இரண்டு விதமான மனப்பான்மையில் உங்களை ஒப்பிட்டுப் பார்க்காத வரை நீங்கள் எப்படி தாழ்வானவராகவோ, உயர்வானவராகவோ இருக்க முடியும்.

இவ்வுலகில் நீங்கள் மட்டுமே இருந்தால் உங்களை நீங்கள் யாருடன் ஒப்பிட முடியும்? அப்படியானால் எப்படி நீங்கள் தாழ்ந்தவராக இருக்க முடியும்.

இல்லை உயர்ந்தவராகத் தான் எப்படி இருக்க முடியும்.

நீங்கள் நீங்களாக தான் இருக்க முடியும் . தனியே இருக்கும்போது நீங்கள் உயர்ந்தவரும் அல்ல, தாழ்ந்தவரும் அல்ல. இதுதான் உயிரின் (ஆன்மாவின்) உயர்ந்த தன்மை. அது யாருடனும் ஒப்பிடுவதில்லை.

நீங்கள் உங்களை யாருடனும் எதற்கும் ஒப்பிட வேண்டாம். நீங்கள் தனித்தன்மை வாய்ந்தவர்.நீங்கள் சிறப்பானவர்.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்

இம்மாத சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் நாம் தரிசிக்க இருப்பது, ஸ்ரீலஸ்ரீ பாக்கியநாதன் (எ) பிச்சை சுவாமிகளின் சீவ சமாதி தரிசனம்.



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

ஸ்ரீலஸ்ரீ பாக்கியநாதன் (எ) பிச்சை சுவாமி

சுவாமிகள் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள போளூர் வட்டம், களம்பூர் என்ற கிராமத்தில் தனபால் மணிமந்திரம் என்ற தம்பதியினருக்கு மகனாக பிறந்தார். தனபால் அவர்களும் மிகுந்த ஆன்மீக ஈடுபாடு உடையவராக வாழ்ந்தார்.

சுவாமிகள் வளர்ந்து வாலிப வயதை அடைந்ததும் நாட்டுப்பற்று மிக்கவராகவும், ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு கொண்டவராகவும் இருந்தார். வீட்டாரின் எதிர்ப்பையும் மீறி இந்திய இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார். இவரின் சிறப்பான செயல்பாட்டின் காரணமாகவும், இவரின் வீரதீர செயலை யும் பாராட்டி அப்போதைய பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் சுவாமிகளுக்கு தங்கப்பதக்கம் வழங்கி கவுரவித்திருக்கின்றார்கள்.

சுவாமிகள் இராணுவத்தில் பணியாற் றிய போதே, பெற்றோர்கள் அவருக்கு பத்மாவதி என்ற பெண்ணை திருமணம்



செய்து வைத்தனர். சுவாமிகளுக்கு, பாரதி, பவானி, பரமேஸ்வரி, பாக்கியலட்சுமி,பிரேமா என்ற ஐந்து பெண்குழந்தைகள் உள்ளனர்.

போளூரில் ஸ்ரீ மத் விட்டோபா சுவாமிகளின் சீவ பீடம் அருகே இவர்களது குல தெய்வம் ஸ்ரீ ஜடா முனீஸ்வரன் ஆலயம் உள்ளது. இராணுவ விடுமுறையில் வரும் போது சுவாமிகள் இவ்வாலயத்திற்கு

வந்து தீவிரமாக வழிபாடு செய்வார். அவரது தந்தை தனபால், ஊரில் நோய்வாய்பட்டவர்களுக்கு ஸ்ரீ விட்டோபா சுவாமிகளின் சீவசமாதியில் இருந்து மண்எடுத்து அதையே மருந்தாகக் கொடுத்து குணப்படுத்துவார்.

நமது சுவாமிகள் திருப்பதி பாபநாசம் பகுதியில் உள்ள மலைக் குகைகளில் அடிக்கடி தவம் மேற்கொள்வார். சுவாமிகள், ஆறு அடி உயரத்தில் கம்பீரமாக இருப்பார்.சுவாமிகளின் இஷ்ட தெய்வம் கணபதி.1989 ல் வீட்டைவிட்டு வெளியேறிய சுவாமிகள் திண்டுக்கல் பகுதிக்கு வந்தார். அங்கிருக்கும் வெள்ளை விநாயகர் ஆலயம் அருகில்தான் பெரும்பாலும் வசித்தார்.

சுவாமிகள் திண்டுக்கல் வருவதற்கு முன்பு வரை எந்த ஒரு கெட்ட பழக்கமும் இல்லாமல் இருந்தார். இங்கு வந்தவுடன் பொடி போட ஆரம்பித்தார். இவரை தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் பொடி மட்டை வாங்கிக் கொடுப்பதால், சுவாமிகளுக்கு பொடி மட்டை சுவாமிகள் என்ற பெயர் வந்தது. பக்தர்களிடம் பொடி மட்டையை கேட்டு வாங்குவதால் பிச்சை சுவாமிகள் என்றும் அழைக்கப்பட்டார்.

சுவாமிகளின் குடும்பத்தார் இவரைக் காணது பல இடங்களில் தேடி அலைந் தனர். இறுதியில் ஒரு பக்தரின் மூலமாக திண்டுக்கல்லில் இருப்பதாக கேள் விப்பட்டவர்கள் அவரை நேரில் சந்தித்து வீட்டிற்கு வருமாறு அழைத்தனர். சுவாமிகள் அதற்கு உடன்படவில்லை. அவர் எப்போதும் வெள்ளை விநாயகர் ஆலயத்தின் அருகில் இருப்பதையே விரும்பினார்.

குடும்பத்தினரும் அவரை விநாயகரிடம் ஒப்படைத்துவிட்டு வீடு திரும்பினர். இருந்தாலும் அடிக்கடி திண்டுக்கல் சென்று



சுவாமிகளை பார்த்து வந்தனர். ஒருமுறை சுவாமிகளின் மனைவி பத்மாவதியும், மூத்த மகள் பாரதியும் அவரை பார்க்கச் சென்ற போது, என்னுடைய சமாதிக்கு நீங்கள் இருவரும்தான் அபிஷேக ஆராதனைகள் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் வைத்திருக்கின்றார்.

பக்தர்கள் சுவாமிகளுக்கு, டீ, வடை வாங்கிக் கொடுப்பார்கள் ஒருசிலரிடம் வாங்கிக் கொளவார். சிலரிடம் வாங்க மாட்டார். மனம் போன் போக்கில் நடப்பார். எங்காவது படுத்திருப்பார்.

திண்டுக்கல்லில் பிரபலமான இவரிடம், அடி வாங்குபவர்களின் துன்பம் நீங்கும் என்பது பக்தர்கள் நம்பிக்கையாக இருந்தது.

சுவாமிகளுக்கு உடல்நலம் இல்லாத காரணத்தினால் அவருடைய குடும்பத்தினர் அவரை சொந்த ஊருக்கு அழைத்து சென்றனர். அங்கு சென்றதும் 2021 மே மாதம் 7 ம் தேதி சித்திரை மாதம், உத்திராடம் நட்சத்திரத்தில் சமாதி நிலையை அடைந்தார்.

இதையடுத்து பக்தர்களின் கோரிக் கையை ஏற்று, சுவாமிகளின் திருஉடலை அவருடைய குடும்பத்தினர் அனுமதி



யோடு திண்டுக்கல்லை அடுத்த குஞ் சனம்பட்டிக்கு கொண்டு வந்து சமாதி செய்விக்கப்பட்டது.

மேலும் சமாதி மீது பிரதிஷ்டை செய்வதற்காக காசியில் இருந்து 1அடி உயரத்தில் சிவலிங்கம் கொண்டுவரப்பட்டு. ஒரு மண்டலம் பூஜை செய்து சுவாமிகளின் சமாதி இருக்கும் இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ பாக்கியநாதன் என்ற பிச்சை சுவாமிகளின் வரலாற்று குறிப்புகளை எனக்குக் கூறிய அவருடைய மூத்த மகள் திருமதி. பாரதி அவர்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சித்தர்களை வணங்கி அவன் தாள் பணிவோம் !

சீரான வாழ்க்கையை சிக்க லின்றி பெறுவோம் !

சீவபீட முகவரி:

ஸ்ரீலஸ்ரீ பாக்கியநாதன் (எ) பிச்சைசுவாமிகள் சீவ பீடம், குஞ்சனம்பட்டி கிராமம், திண்டுக்கல் மாவட்டம்.

பேரூந்து வழித்தடம்:

திண்டுக்கல் பேரூந்து நிலையத்தில் இருந்து, 6 ஙி தடம் எண் கொண்ட பேரூந்தில் பயணித்தால் குஞ்சனம் பட்டி 4 ரோடு வரும். அங்கு இறங்கி நடந்தால் சில அடி தூரத்தில் சித்தரின் சீவபீடத்தை அடையலாம்.

புகைவண்டி வழித்தடம்:

திண்டுக்கல் இரயில் நிலையத்தில் இருந்து பேரூந்து, ஆட்டோ மூலம் குஞ் சனம்பட்டி கிராமத்திற்கு செல்லலாம்

- (தொடரும்)



ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜபம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

காஞ்சி மகான் "மகா பெரியவா"

மஹாபெரியவா 1894 மே 20 அன்று தென் ஆற்காடு மாவட்டத்தில் விழுப்புரத்தில் சுப்ரமண்ய சாஸ்திரி மகாலட்சுமி தம்பதியினருக்கு மகனாக அவதரித்தார்.

இவரது தந்தை சுப்ரமண்ய சாஸ்திரி, கன்னட மொழி பேசும் ஸ்மார்த்த பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர், அவர் மாவட்ட கல்வி அதிகாரியாகப் பணிபுரிந்தவர். இவரது தாயார் மகாலட்சுமி திருவையாறுக்கு அருகிலுள்ள இச்சங்குடி கிராமத்தைச் சேர்ந்த கன்னட பிராமணர் ஆவார்.

இவர்களின் இரண்டாவது குழந்தையே மஹாபெரியவா என அழைக்கப்பட்ட சந்திரசேகர சரசுவதி சுவாமியாவார். இவருக்கு பெற்றோர் வைத்தப்பெயர் ஸ்வாமிநாதன். தனது துவக்கக் கல்வியை திண்டிவனத்தில் உள்ள ஆற்காடு அமெரிக்கன் மிசன் உயர்நிலைப்பள்ளியில் பயின்றார்.

இவருக்கு உபநயனம் 1905 ஆம் ஆண்டில் திண்டிவனத்தில் நிகழ்த்தப்பட்டது, சிறு வயதிலேயே வேதங்களை நன்கு உச்சரிக்கத் தொடங்கிய பெரியவா. சிறப்பாக பூஜைகளும் செய்யத் தொடங்கினார்.

1906 ஆம் ஆண்டில், காமகோடி பீடத்தின் அறுபத்தி ஆறாவது ஆச்சார்யா, ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், சதுர்மஸ்ய



விரதத்தைக் கடைப்பிடிப்பதற்காக திண்டிவனத்திற்கு அருகிலுள்ள பெருமுக்கல் என்ற சிறிய கிராமத்தில் முகாமிட்டிருந்தார்.

அப்போது பெரியவா, ஆச்சார்யாவிடம் சென்று ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டார். ஆச்சார்யர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதியின் மறைவிற்குப் பின்னர் சந்திரசேகர சரசுவதி சுவாமியின் தாய் வழி உற வினர் அறுபத்தியேழாவது ஆச்சார்யராக நியமிக்கப்பட்டார்.

அவர் உடல் நலம் குன்றியதால், பின்னாளில், மகா பெரியவா என்று பக்தர்களால் அழைக்கப்பட்ட ஸ்ரீ சந்திரசேகர சரசுவதி சுவாமிகள் 1907 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 ஆம் தேதி தனது 13 வது வயதில் காஞ்சி காமகோடி பீடத்தின் அறுபத்தெட்டாவது ஆச்சார்யராக நியமிக்கப்பட்டார்.

அதன்பின்னரே மகா பெரியவா அவர்கள், வேதங்கள், புராணங்கள், பல்வேறு இந்து நூல்கள் மற்றும், பண்டைய இந்திய இலக்கிய நூல்களிலும் நன்கு பயிற்சி பெற்றார். 1909 ஆம் ஆண்டு இரண்டாண்டுகள் மடத்தினில் தங்கி வேதாந்தங்களைக் கற்றுக் கொண்டார்.

பின்னர் 1911 முதல் 1914 வரை அகண்ட காவிரியின் வடகரைக் கிராமமான மகேந்திரமங்கலத்தில் கற்றார். இவர் கணிதம், வானியல் மற்றும் புகைப்படத்துறை, கல்வெட்டுத் துறைகளிலும் அதிக ஆர்வம் காட்டினார். 1914 ஆம் ஆண்டில் கும்பகோணம் திரும்பினார்.

இந்திய ஆன்மீக நிலப்பரப்பெங்கும் ஆன்மீகப் பயணம் செய்து தனது நிறைஞான அறிவைப் பரப்பத் தொடங்கினார். அனு தினமும் தவறாது அதிகாலையில், சந்தியாவந்தனம் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரி பூஜை, ஸ்ரீ பஞ் சதான்ய பூஜை, காமாட்சி அம்மன் பூஜை ஆகியவற்றைச் செய்வது வேதங்களை ஓதுவது, போன்ற இவரது நடவடிக்கைகள் இவரை உலகெங்கும் பிரபலமாக்கியது.

ஐயங்கார்கள், பிற சாதியினர், கிறிஸ்துவர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் கூட இவரது பக்தர்களாயினர். அவர்கள்



சந்திரசேகர சரசுவதி சுவாமியின் பழக்கவழக்கங்களையும், அவர் சிக்கல்களை பதில் சொல்வதையும் வைத்து அவர் ஒரு மனிதரல்ல ஜகத்குரு என அழைத்தனர்.

இறைவன் சிவனை வழிபடுவதற்காக வந்த காமாட்சி அம்மனுக்காக சந்திரசேகர சரசுவதி சுவாமிகள் தன் வாழ்வை அர்ப்பணித்தார். எளிய முறையில் பக்திபூர்வமாக இருப்பதற்கான பொறுப்பினை ஏற்று ராமா ராமா என உச்சரிப்பதன் மூலமோ அல்லது எழுதுவதன் மூலமாகவோ அதிக பக்திபூர்வமாக இருக்க இயலும் என உணர்த்தினார்.

உலகம் முழுவதிலுமுள்ள பக்தர்கள் இவரை வணங்கினர். இவரது உரைகளைக் கேட்ட மத்திய மாநில அரசுத் தலைவர்கள் இவரது வழியைப் பின்பற்றினர். வாழ்நாள் முழுவதும் அத்வைத சித்தாந்தவாதியான



ஆதிசங்கரரின் வழியைப் பின்பற்றி நடந்தார்.

மேலும் தன் வாழ்நாளெல்லாம் கோவில்களைப் புதுப்பிப்பதிலும், விஷ்ணுசகஸ்ர நாமம் உள்ளிட்ட மந்திரங்களை மிகச் சரியாக உச்ச ரிக்கச் செய்வதிலும், சரியான உச்சரிப் புடன் வேதங்கள் ஓதுவதையும், சபரிமலை ஐயப்பன் சுவாமி மற்றும் திருப்பதி வெங்கடாசலபதி கோவில் ஆகியவற்றின் மீது மக்களுக்கு அதிக பக்தியுணர்வு வளரவும் அக் கோயில்களில் ஆகம விதிகள் தீவிரமாக கடைபிடிப்பதையும் நடைமுறைப் படுத்தினார்.

இவரது 99 வது பிறந்தநாள் கொண்டாட்டங்களை, சங்கரமடம் ஒரு பெரிய நிகழ்வாக கொண்டாடியது. 8 ஜனவரி 1994 இல் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடாமல் இவர் உடலை உகுத்து இறைவனுடன் கலந்தார்.

சிறந்த ஞானியாக ஆதிசங் கரரைப் போலவே இவரும் நாட்டின் பல்வேறு இடங்களில் சுற்றுப்பயணம் செய்து சொற்பொழிவாற்றினார். பல இடங் களில் தர்மம், பண்பாடு, கலாச்சாரம் பற்றி= மக்களிடம் விளக்கிக் கூறினார். திண் ணைகள், ஆற்றுப்ப டுக்கைகள், சிறிய கூடங்கள் என எல்லா இடங்களிலும் சொற்பொழிவாற்றினார்.

அவர் ஆற்றிய சொற்பொழி வுகளின் தொகுப்பு தெய்வத்தின் குரல் எனும் புத்தகமாக தொகுக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்நூல் ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளில் மொழி பெயர்க் கப்பட்டுள்ளது. நாட்டின் பலபகுதிகளில் சனாதான தர்மத்தின் நடைமுறைகளைக் கொண்டு வந்தார். இதன் பயனாக பல்வேறு வேத பாட சாலைகள் உருவாக்கப்பட்டன.

பல முக்கியப் பிரமுகர்கள் சந்திரசே கர சரசுவதி சுவாமிகளை சந்தித்து ஆசியும், ஆலோசனைகளையும் பெற்றிருக்கின்றனர். தலாய் லாமா, சத்ய சாய் பாபா, மஹாத்மா காந்தி, ராஜாஜி, கண்ணதாசன், எம்.எஸ். சுப்புலெஷ்மி அவர்களில் சிலர்,

இயல்பான அறிவுக்கூர்மையும் ஆன்மிக நாட்டமும் கொண்டவர். சுமார் 18 மொழிகளில் பேச எழுத படிக்கத் தெரிந்தவர். கல்வெட்டில்

இருக்கும் மொழிகளை இலக்கணத்தோடு விவாதிக்கும் திறமை பெற்றவர்.

தெய்வத்தின் குரல் என்ற பெயரில் இந்து மதத்தின் தத்துவங்களை புத்தகமாக எழுதியுள்ளார். மூன்று முறை கால்நடையாகவே இந்தியா முழுவதும் வலம் வந்து பக்தி நெறியை பரப்பியுள்ளார். மனிதர்களிடமும் விலங்குகளிடமும் அன்பு செலுத்துவதை தன் வாழநாள முழுவதும் தனது இயல்பாக வைத்திருந்தார்.



அரசியல் தலைவர்கள், வெளிநாட்டுப் பிரமுகர்கள் என யார் வந்தாலும் அனைவரிடமும் சமமான கருணையும் நேசமும் காட்டுவார். கடவுள் நம்பிக்கையற்ற எம் ஆர் ராதா, கண்ணதாசன் போன்றவர்கள் பின்னாளில் இவரை சந்தித்து ஆன்மீகவாதியாக மாறினார்கள்.

உலகப் புகழ் பெற்ற கிறிஸ்தவ பாடகர் ஒருவர் இந்து மதத்திற்கு மாற முயற்சி செய்தபோது உன் மதத்தில் என்ன இல்லை என இங்கு வருகிறாய்? என்று கேள்வி கேட்டார். அன்று முதல் அந்தப் பாடகர் கிறிஸ்தவ மதத்திலேயே இருந்தார்.

சாப்பிடுவதற்கு எண்ணற்ற உணவுகள் வந்தாலும் அதனை தவிர்த்து நெல், பொரி போன்ற உணவுகளை உண்ணுவார். அதுவும் ஒரு வேளை மட்டும்.

அந்நியத் துணிகளுக்கு எதிராக சுதேசி இயக்கம் நடந்த போது கதர் ஆடைக்கு மாறினார். தனது சீடர்களையும் அவ்வாறே செய்யுமாறு அறிவுறுத்தினார்.

காஞ்சி மடத்தின் தலைவராக 87 ஆண்டுகள் இருந்து வந்தார். உண்மையான துறவு வாழ்க்கையை வாழ்ந்தவர்.

காஞ்சி மடத்தின் தலைவராக 87 ஆண்டுகள் இருந்து வந்தார். உண்மையான துறவு வாழ்க்கையை வாழ்ந்த உத்தமர் மகா பெரியவா.

நடமாடும் தெய்வமாகத் திகழ்ந்து, பக்தர்களுக்கு அருள்பாலித்து, நன்னெறி புகட்டி, அவர்களை நல்வழிப் படுத்திய மகான், காஞ்சி மகா பெரியவர்.

'பெரியவா...' என்று நித்தமும் அவர் நினைவிலேயே வாழ்ந்து, அவருடைய கருணை நிழலில் இளைப்பாறி, துயரங்கள் மறந்து, உள்ளம் தூய்மை அடைந்த பக்தகோடிகள் ஏராளமானோர். காஞ்சிப் பெரியவருடனான தங்கள் அனுபவங்களை விவரிக்கும்போது பக்தர்களுக்கு நா தழுதழுக்கும், கண்கள் பனிக்கும், உடல் சிலிர்க்கும்.

சாயி பக்தி வோர்ல்டு -2

அன்பிற்கினிய சாய் சொந்தங்களே! அநேக பாபா பக்த வாசகர்களின் கோரிக்கைக்கிணங்க நமது இதழில் மீண்டும் சாய் பக்த லீலாமிர்தம் தொடர்கின்றது. இது உங்களுக்குண்டான பக்கம். பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இந்த வாரம் சென்னையை சேர்ந்த நண்பர் ஒருவர் தனது அனுபவங்களை விவரிக்கிறார். படித்தறிவோம்!

வணக்கம், என் பெயர் சாயி நேசன்.

(பெயர் மாற்றப்பட்டுள்ளது).சொந்த ஊர் சென்னை, வயது 37 எனது குருநாதர் திரு. ஸ்ரீராம் அவர்களின் வழிகாட்டுதலின்படி, எனது சொந்த வாழ்வில் நான் அனுபவித்த கொடிய துயரங்களையும், பாபாவின் திருவடிகளில் நான் சரணடைந்த பின், எனது குரு ஸ்ரீராம் அவர்கள் அளித்த ஹீலிங்காலும்,தியானப் பயிற்சியாலும், எனக்கு ஏற்பட்ட அதிசயத்தக்க நல்ல மாற்றங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இதனால்,என்னைப் போன்று, கொடிய துயரங்களை சுமந்து கொண்டிருக்கும் அனைவருக்கும், என் வார்த்தைகள், ஆதரவாகவும், நம்பிக்கை ஊட்டுவதாகவும் அமையும் என்று நம்புகிறேன்.

எனது 14 வயதுவரை நானும் எல்லோரையும் போல சராசரியான குழந்தையாகவே, ஆரோக்கியமாக வாழ்ந்து வந்தேன். எனது15 வது வயதில் எனக்கு நரம்பு மண்டலத்தின் பாதிப்பு ஏற்பட்டு, அடிக்கடி மயக்கம் வர ஆரம்பித்தது. அதற்காக நகரின் பிரபலமான ஓர் நரம்பியல் மருத்துவரிடம் சிகிச்சை பெற்றேன். அப்பொழுது இப்பிரச்சனை என் வாழ்வில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்று எனக்கு தெரிந்திருக்கவில்லை.

12 ஆம் வகுப்பு படிக்கும்போது ஓ.சி.டி (அப்ஸஸில் கம்பல்ஸிவ் டிஸ்சார்டர்) என்ற மனநோயால் பாதிக்கப்பட்டேன்.

அந்த நோயின் அறிகுறி என்ன வென்றால், எல்லா விதத்திலும் நான் மிகச்சரியாக இருக்க வேண்டும் என்ற இறுக்கம் இருந்து கொண்டே இருக்கும். அதாவது நான் செய்வதையே மீண்டும், மீண்டும் செய்து கொண்டே இருப்பேன். உதாரணத்திற்கு, கை கழுவினால் கழுவிக்கொண்டே இருப்பது, பூட்டியபின் பூட்டை இழுத்துப் பார்த்துக் கொண்டே இருப்பது என பட்டியல் நீளும்.

எல்லோருக்கும் இது குறைந்த சதவீதம் இருக்கும். அது ஒரு எல்லையை தாண்டும் போது, அடுத்த

சிந்தனைக்குப் செல்லாமல், அதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்போம். இதனால் என்னால் சரியாக படிக்க முடியவில்லை. 12 ஆம் வகுப்பில் மிகக் குறைவான மதிப்பெண் எடுத்து சரிவை சந்தித்தேன். சக மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமும், அவப்பெயர் பெற்றேன்.

மிகுந்த சிரமத்திற்குப் பின்பு 12 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றேன். என் பெற்றோரின் அழுத்தத்தினால் எனக்கு விருப்பம் இல்லாமல், பொறியியல் படிப்பில் சேர்க்கப்பட்டேன். அப்போது எனக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. எதற்கு படிக்கின்றோம். அடுத்து என்ன செய்யப்போகின்றோம். வாழ்க்கை என்றால் என்ன, என்று எதுவுமே தெரியாமல் ஒவ்வொரு நாளும் திசை தெரியாத காட்டில் விடப்பட்டவன் போல் திகைத்த காலம் அது.

என் பெற்றோர்கள் இருவ ரும் வேலைக்குச் சென்று கொண்டிருந் ததினால் என் பாட்டி தான் என்னை வளர்த்தார்கள். அவர்களுக்குத் தெரிந்தது எல்லாம் கோவில், கட வுள் மட்டும் தான். என்னுடைய பிரச்சனையைப் பற்றி யாரும் என் னிடம் கேட்காததால் என் மனோ வியாதி அதிகரித்துக் கொண்டே இருந்தது. எப்போது பார்த்தாலும் எங்கோபார்த்துக் கொண்டு, எதையோ சிந்தித்துக் கொண்டிருப்பேன்.

என்னுடைய நிலையைக் கண்ட என் பெற்றோர் என்னை ஒவ்வொரு மனோதத்துவ மருத்துவரிடமும், மாந்திரீகம் செய்பவர்களிடமும் மாறி, மாறி கூட்டிச் சென்றனர். முடிவில் எனக்கு யாரோ செய்வினை வைத்துவிட்டதாக முடிவு செய்து



அதையே நம்பினார்கள்.

மனோதத்துவ மருத்துவர்கள் என்ன செய்வார் என்பது உங்களுக்கே தெரியும். எங்களது தொந்தரவுகளை தாங்கமுடியாமல் மூன்று வேலையும், எங்களை தூங்க வைப்பதற்கு மாத்திரை கொடுத்து தூங்க வைத்துவிடுவார்கள். அதனால் மணிக்கணக்காக நான் தூங்கிக்கொண்டே இருப்பேன்.

இது போதை மாத்திரைக்கு சமமானது. நம்மை ஒரு வித போதை மயக்கத்திலே வைத்திருக்கும். சராசரி மனிதனாக செயல்பட விடாது. இப்படியாக சென்னையில நான் பார்க்காத மனோதத்துவ மருத்துவர்களோ, மாந்தரீகர்களோ இல்லை என்று சொன்னால் அது மிகையில்லை.

இதனால் எனக்கு என் பொறியியல் பாதிப்பு பாதிக்கப்பட்டது. நான்கு ஆண்டுகளில் முப்பது அரியர்களுடன்

கல்லூரியை விட்டு வெளியேறினேன். கிடைத்த வேலைகளை செய்தேன். ஒன்றிலும் முழுதாய் இரண்டு மாதங்கள் கூட இருக்க முடியவில்லை. ஒவ்வொரு வேலையை விட்டுவிட்டு வரும்போதும் மிகவும் மனம் வருத்தப்படுவேன். கதறி அழுவேன்.

சில நேரங்களில் சுவற்றில் பலமாக முட்டிக்கொள்வேன். என்னைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதே எனக்கு புரியவில்லை.

எனக்கு மட்டுமல்ல என் பெற்றோருக்கும், எனக்கு மருத்துவம் பார்த்த மருத்துவர்களுக்குமே புரியவில்லை. இந்த நிலையில் இந்த சமூகம் எனக்கு பைத்தியம் என்ற பட்டத்தை மறைமுகமாக வழங்கியது. சில உறவுகள் என் காது படவே என்னை பைத்தியம் என்று அழைக்கத் தொடங்கியது.

பலகட்ட பிரச்சனைகளுக்கும், ஆலோசனைக்களுக்கும் இடையே எனக்கு திருமணம் செய்து வைத்தால் எல்லாம் சரியாகிவிடும்? என்று ஒருவாறாக சம்மதிக்க வைத்து திருமணம் செய்து வைக்கப்பட்டது.

ஆனால், என் மனைவி மிகவும் புத்திசாலிப்பெண். திருமணம் ஆன சில நாட்களிலேயே என்னை முழுமையாக புரிந்து கொண்டாள். எனக்கு ஆதரவாக செயல்பட முயற்சித்தாள். ஆனால் பாவம் அவளும் சராசரிப் பெண்தானே!

இருதரப்பு பெற்றவர்களாலும் மிகவும் சிரமப்பட்டாள். என்னால் எவ்வளவோ தாங்க முடியாத பிரச்சனைகளை அனுபவித்தாலும், ஒரு கணம் கூட என்னை விட்டு பிரியும் எண்ணம் இல்லாமல் மிகவும் உறுதியாக பிரச் சனைகளை எதிர்கொண்டாள்.

கிட்டதட்ட 35 வேலைகளை மாறியிருந்தேன். பல சோதிடக்காரர்கள் என் சாதகத்தை பார்த்து பலன் சொல்லி அவர்களின் பசியை ஆற்றிக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் கூறிய எந்த பரிகாரமும் எனக்கு உதவவில்லை. மேற்கண்ட காலங்களில் மூன்று முறை தற்கொலை முயன்று மூன்று முறையும் காப்பற்றப்பட்டேன். மூன்று முறையும் என் உடல் கெட்டுப் போனதும், மருத்துவ செலவும் தான் மிச்சம்.

இப்படி பிரச்சனைகள் உச்சக்கட்டத்தை அடைந்த போது நான் வாழ்க்கையை மிகவும் வெறுத்த நிலையில் இருந்தேன். அந்த சமயத்தில் தான், எனது சித்தப்பா மகனும் எனது சகோதரனுமான ஒருவர் எனக்கு ஒரு பாபா சிலையை வழங்கி உங்களுக்கு நேரம் கிடைக்கும்போது பூஜை செய்ய கூறிவிட்டு எனது குரு திரு. ஸ்ரீராம் ஐய்யாவையும் அவரின் "சாய் தியானாலயா பிரார்த்தனை மையத்தையும்" அறிமுகம் செய்து வைத்தார்கள்.

ஆனால் திரு.ஸ்ரீராம் அய்யாவை, எனக்கு சிகிச்சை அளித்த பல மருத்துவர்களையும், மாந்திரீகர்களையும் போல தான் இருப்பார்கள் என்று அலட்சியமாக நினைத்தேன். இவர் மட்டும் என் வாழ்க்கையில் என்ன அதிசயத்தை ஏற்படுத்திவிடுவார் என்று நினைத்துக் கொண்டு பட்டும் படாமல் அவருடனான என் முதல் சந்திப்பு நிறைவேறியது.

நான் அவரிடம் விடைபெற்று புறப்படும் போது, நீங்கள் நிச்சயம் குணம் அடைவீர்கள். எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. நீங்கள் அடிக்கடி

தியான மையத்திற்கு வாருங்கள் நீங்கள் விரைவில் குணமடைவீர்கள் என்றார்.

அப்போதுகூட நான் அவரிடம் நம்பிக்கையற்றவனாய், பார்ப்போம் சுவாமி, எனது மனது சொன்னால் வருகிறேன். ஆனால் நான் வருவது கஷ்டம் என்று கூறினேன். அதற்கு குரு அவர்கள், யாருடைய தூண்டுதலும் இல்லாமல் நீங்களே இங்கு வருவீர்கள் சென்று வாருங்கள். என்று அனுப்பி வைத்தார்.

ஆனால் அதிசயம் நிகழ்ந்தது. நானாக சென்று ஸ்ரீராம் அய்யாவை சந்தித்தேன். மனம் விட்டு பேசினேன். அழுதேன் அதற்கு அவர், உங்கள் பதினைந்து வயதில் இருந்து மிகப் பெரிய துயரங்களை சந்தித்து விட்டீர்கள். இனி உங்கள் வாழ்வில் பல திருப்பங்கள் வரும். என்று ஆணித்தரமாக கூறினார். எனக்குள்ளும் ஏதோ மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தது.

தொடர்ச்சியாக குரு. ஸ்ரீராம் அவர்கள் எனக்கு ஹீலிங் செய்து, பாபாவின் கதைகளைக் கூறி தியானத் தில் ஈடுபட வைத்தார்கள். நானும் தியானம் செய்ய ஆரம்பித்தேன். எனக்கு கடைசியாக சிகிச்சை அளித்த சென்னையில் முதலிடத்தில் இருக்கும் மனோதத்துவ நிபுணர் ஒருவர், உன்னால் தியானம் செய்ய முடியாது, நீ தியானம் செய்யவும் கூடாது என்று கூறியிருந்தார்.

ஆனால் என்னால் தியானம் செய்ய முடிந்தது. அதற்கு காரணம் ஸ்ரீராம் அய்யா. என்னை முதலில் ஹீலிங் செய்து மெல்ல, மெல்ல என் மனதை அமைதியாக பெறச் செய்து அப்படியே தியானப் பயிற்சிக்கு என்னை பழக் கினார். அன்றிலிருந்து திரு. ஸ்ரீராம் அய்யாவை என் குருநாதராக ஏற்றுக் கொண்டேன். சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் அவர்தான் என்னை சீடனாக ஏற்றுக்கொண்டார்.

அதுமட்டுமல்ல பாபாவின் கதைகளையும் கூறி என்னை பாபாவின் பக்தனாகவும் மாற்றினார். என் குருநாதரின் ஆசியினாலும், பாபாவின் அருளாலும், இன்று நான் நல்ல உடல் நலத்தோடும், மிக முக்கியமாக நல்ல தெளிந்த மனவளத்தோடும் வாழ்கிறேன்.

புகழ்பெற்ற கல்லூரி ஒன்றில் உதவியாளராக பணியாற்றி வருகிறேன். பாபாவின் மேலுள்ள பக்தியும், என் குரு கற்றுத்தந்த தியானமும் என் வாழ்க்கையை மாற்றியது. நானும் இவ்வுலகில் தற்போது சராசரி மனிதனாக வாழ்கிறேன். எல்லா விஷயங்களிலும் நின்று நிதானித்து, சிந்தித்து முடிவு செய்கிறேன்.

இன்று நான் பகவான் சாயிபாபா விடம் வேண்டுவதெல்லாம் ஒன்றுதான். என்னைப் போன்று, உடலும், மனமும் பாதிக்கப்பட்டு, நடைப்பிணமாக வாழ்ந்து கொண் டிருக்கும் நல்ல உள்ளங்கள் அனைவரும் சாய் தியானாலயா பிரார்த்தனை மையம் வந்து பாபாவைப் பணிந்து, தியானம் பயின்று சராசரியான வாழ் விற்கு திரும்ப வேண்டும்.

நிச்சய மாக பாபாவின் மீது நம்பிக்கை வைத்து தியானம் பயின்றால் உங்கள் நிலை எதுவாயினும் மாறும். இது சத்தியம். பகவான் பாபாவிற்கும், என் குருநாதர் ஸ்ரீராம் அய்யாவிற்கும் கோடி நமஸ்காரங்களையும், நன்றிகளைத் இதன் மூலம் கூறிக்கொள்கிறேன்.

– அன்புடன்,
சாயிநேசன்.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

உங்கள் பிரார்த்தனை நிறைவேற...

எப்பொழும் உங்களுக்காக பிரார்த்திக்கா மல் தினசரி ஐந்து நிமிடம் மற்றவர்களுக்காக பிரார்த்தனை செய்யும் பொழுது நம்முடைய எண்ணங்கள் நேர்மறையில் செயல்பட்டு நல்ல மாற்றங்களை நமக்குள்ளும் கொண்டு வருகிறது.

நம்முடைய தேவைகளை இறைவன் அறிவார் என்ற நம்பிக்கையுடன் நாம் நம்முடைய தேவைகளுக்காக எந்த வேண்டுதலும் இல்லாமல் அடுத்தவர்களுக்காக பிரார்த்தனையில் ஈடுபடும் பொழுது நம்முடைய தேவைகள் தானாகவே நிறைவேறும்.காலப்போக்கில் நமக்கு தேவை என்பதே இல்லாமல் நம் மனம் எப்பொழுதும் ஆழமான அமைதியில், அபரிமிதமான ஆசிகளுடன், எப்பொழுதும் நிறைவாகவே இருக்கும்.

இப்படிப்பட்ட பிரார்த்தனையில் ஈடுப எல்லோருக்கும் வாய்ப்பு அமைவதில்லை. மனமும் இருப்பதில்லை. ஆனால் நமக்கு இந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. நம்மையும் நம் சுற்றி உள்ளவர்களை உயர்த்த நமக்கான வாய்ப்பு இது. இந்த வாய்ப்பை தவறாமல் பயன்படுத்தி நாமும் உயர்ந்து நம்மை சார்ந்தவர்களையும் உயர்த்துவோம்.

உளமார பிரார்த்தனையில் ஈடுபடும் பொழுது நமது தீய கர்மா குறைந்து, அபரிமிதமானஆசீர்வாதங்கள் அதிகரிக்கிறது.

எப்பொழுதும் நேர்மறையான எண்ணங்களால் நிறைந்து இருக்க முடிகிறது. அடுத்தவர்களுக்காக இந்த ஐந்து நிமிடம் நமக்கான மிகப் பெரிய ஆசீர்வாதம். உணர்ந்து பயன்படுத்திக் கொள்வதற்கு மனமார்ந்த நன்றிகள்.

நிறைவான தரம்! முழுமையான நம்பிக்கை!

CJ ELECTRICAL & CIVIL CONTRACTORS

OLD NO. 23, NEW NO. 51/2,
RAMANATHAN STREET,
AYANAVARAM,
CHENNAI-600023
V.CHANDRAN.

CELL: 9884892466,
8248766889



இன்பத்தின் ஆரம்பம்!

உங்களது எண்ணங்கள் அனைத்தும் இன்பத்தை தேடியே செல்கிறது. ஆனால் யாரும் அழைக்கமலேயே, துன்பம் ஏன் குறுக்கே வருகிறது ? சிந்தித்துப் பார்த்தீர்களா?

எவருமே துன்பத்தை நேரடியாகத் தேர்ந்தெடுக்க மாட்டார்கள்.ஆனால், ஒவ்வொரு வரிடமும், துன்பம் எந்தவித பாகுபாடும் பார்க்காமல்,பின்பக்கமாக வந்து சேர்ந்து கொள்கின்றது. நீங்கள் வலிய சென்று இன்பத்தை தேர்ந்தெடுப்பதன் மூலம், அதன் மறு முறையான துன்பத்தையும் சேர்த்து தான் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றீர்கள்.

இன்பம் என்பதே ஒரு மாயை. அது ஒரு பொய்யான திரை. நீங்கள் இன்பத்தை விரும்பினால்,உங்களது நினைவில் மட்டுமே அது இன்பம்.

இன்பத்தை நோக்கி செல்லும்போது, உங்கள் நினைவில், அது மெல்ல மெல்ல மறைவதைக் காணலாம். அதுவே, துன்பமாக மாறுவதையும் உணரலாம்.

இன்பம் என்பது, உண்மையில் துன்பத்தின் பொய்யான முகம் என்பதை எவருமே உணர்வதில்லை. நீங்கள் சொர்க்கத்தை தேர்ந்தெடுத்து முடிவில் நரகத்தை அடைகிறீர்கள் நீங்கள் இன்பத்தை தேடவில்லை என்றால், துன்பமும் உங்களைத் தேடாது. உங்களுக்கு வந்து நீங்கள் அனுபவித்த துன்பத்தை ஒருமுறை ஆராய்ந்து பாருங்கள். அது ஒரு, இன்பத்தின் ஆரம்பமாகவே இருக்கும்.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,
17/7 **A**, *பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,*
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:
S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. பாலகிருஷ்ணன். அண்ணாநகர். ரூ.3000.

திரு.எல்.காமராஜ். கோயம்பேடு. ரூ.3000

திரு.பாபா மாஸ்டர். பாண்டிச்சேரி. ரூ.2000

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம். ரூ.2000.

திரு.சோலைமுத்து. அரியலூர்.ரூ.1500

திருமதி.சரஸ்வதி கமலக்கண்ணன். வேப்பம்பட்டு. ரூ. 1001.

திரு.கோலப்பன். நெய்வேலி.ரூ.1000.

திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.800

திரு.கேஸ்வர்.ஈரோடு.ரூ.500.

திரு. சாய்கிருபா. மதுரை .ரூ 500.

திரு.வெங்கடாசலம். டி.நகர்.ரூ.500.

திரு.உமா சக்திவேல். AYK.ரூ.200.

திரு.ராதாகிருஷ்ணன்.பாரதி நகர். ரூ.250.

திரு.ஹேமரம்யா. கோவை.ரூ.500.

திரு.ஸ்ரீ சக்திகேஸ்வரன்.மதுரை. ரூ.500.

திருமதி. வாழ்க வளமுடன் சுமதி, பெரியார் நகர். ரூ.500.

திருமதி.பாக்கியவதி. ராணிப்பேட்டை. ரூ.400.

திரு. பாலசுப்பிரமணியம். திட்டை. ரூ.400.

திரு.இராஜபாண்டி. டி.கல்லுபட்டி.ரூ.300

திரு.வி.நாகராஜன். ஆதம்பாக்கம். ரூ.200

செல்வி.சக்திதேவி.அயனாவரம்.ரூ.201

திரு.குமரன் ஸ்டோர்ஸ்.-டிராவல்ஸ். பெரியார் நகர் ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி. ஓய்வு.அசோக் லேலண்ட். கொளத்தூர்.ரூ.200.

பேபி.வீ.ஸ்ரீமதி, அம்பத்தூர். ரூ.150.

திரு. கே.எஸ். பத்ரிநாத். வில்லிவாக்கம். ரூ. 101.

திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.

திருமதி.அபிராமி அசோக்.AYK. ரூ.100.

திருமதி.உமா முருகன். AYK.ரூ.100.

திருமதி. வரலட்சுமி பிரபாகரன்.
அயனாவரம்.ரூ.100.

திரு.சிவா அரிசி மளிகை பெரியார் நகர் ரூ.50.

திரு. ஏ.ராஜேந்திரன்.பெரியார் நகர். ரூ.50.

திரு.காரத்திகா வர்ஷினி.
சரோஜினி நகர்.ரூ.50.

திரு.அகஸ்டின் குடும்பத்தார்.
திருநீர்மலை. அரிசி 25 கி.



என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும்
அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும்
என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் முலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு.உதி.மூர்த்தி. பெரம்பூர்.ரூ.1000
திரு. சாய் கிருபா. மதுரை. ரூ.500.
திரு. வேலநாதன். பழனி. ரூ. 500
திரு. கோலப்பன். ரூ.200.
திருமதி.ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர்.ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:

ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.

போன்: 9941816692, 8825831068.



சாய் ராஜயோகாவின் தயாரிப்பு

அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஓரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.




தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:

சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்

9941816692,
8825831068.

Sai maharaj Guruvaithedi -Tamil monthly - Registered with Registrar of Newspaper for India under no . TNTAM/2019/78281

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068